Registered as a news paper.

பக்கங்கள்: பத்து


விலை: ரூபா 6.00

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-729)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 18 (21.04.2003) திங்கட்கிழமை இதழ் :200



## வைத்திய கலாநிதி கெங்காதரன் தேசியத் தலைவரால் கௌரவிப்பு!

### சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கினார்

யாழ்ப்பாணத்திலும், பின்னர் தற்போது வன்னிப் பகுதியிலும் அளப்பரிய மருத்துவ சேவையாற்றிவரும் வைத்திய கலாநிதி கெங்காதரன், மருத்துவ சேவையில் தனது 50 வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இவர் தனது சேவைக்காலத்தில், மனித விழுமியங்களின் உச்சத்தைத்தொடும் வகையில் மக்களுக்கு வைத்திய சேவையாற்றியுள்ளார்.

மனித வரலாற்றில் - வைத்திய சேவையென்பது மிகவும் மகோன்னதமாகும். இம் மகோன்னத சேவையில் கடமையாற்றியவர்களில் பலர், சேவையின் உச்சத்தைத் தொடடுத் தடம் பதித்துள்ளனர். அவ்வாறானவர்களுக்குச் சற்றும் சளைக்காது, வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களும் அச்சேவையை ஆற்றியுள்ளார்.

மக்கள் - இடம்பெயர்ந்து, இன்னலுற்று மருந்துத் தடைகள், வைத்தியர் பற்றாக்குறை காரணமாக அல்லற்பட்டபோது, இரவு பகல் நேரகாலம் பாராது சேவையாற்றியுள்ளார். சேவையாற்றியும் வருகின்றார். நெருக்கடியான காலகட்டத்தில் வன்னியில் பலவீனமுற்றிருந்த வைத்திய சேவை, இவரால் பலம்பெற்று மக்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையானது.

இவரது சேவை (10 ஆம் பக்கம் பார்க்க)

# தனியொரு கடற்படையாக கடற்புலிகள்; இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும்!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சிபார்சு

(கொழும்பு)

**புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் - குறிப்பாக, இலங்கையின் கடற்படை - விடுதலைப் புலிகளின் கடற்பிரிவான கடற்புலிகளை தனியான கடற்பிரிவாக அங்கீகரிக்க வேண்டும் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரைகேவ் ரெலவ்சன், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சமர்ப்பித்துள்ள - 'இலங்கைக் கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையிலான மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளும் வழிமுறைகள்' என்ற முதற்பணி அறிக்கையில் சிபார்சு செய்துள்ளார்.**

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இந்த அறிக்கை, கடந்த 3 ஆம் திகதி அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தின் மூலமும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் மூலமும் இருதரப்புக்களுககும் கையளிக்கப்பட்டன.

இந்த அறிக்கை தொடர்பாக, இன்றைக்குள் தமது சிபார்சு அறிக்கைகளைத் தமக்கு வழங்குமாறு இரு தரப்பையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரியுள்ளது.

மேஜர் ஜெனரல் ரைகேவ் ரெலவ்சன் இரண்டு தரப்புக்களுக்கும அனுப்பியுள்ள அறிக்கையில் -

★ இரண்டு தரப்புக்களின் கடற்பிரிவுகளும், போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் சர்வதேச சட்டங்களையும் கடற்பரப்பில் பேணிக்கொள்ள வேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து சமாதான பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிப்பு

### லண்டனில் பீரிஸ் - பாலா சந்திப்பு

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில, தாய்லாந்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் மே 02 ஆம் திகதிவரை நடைபெறவிருந்த, ஏழாம்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கான விஜயத்தினை மேற்கொண்ட, அரச தரப்புப் பிரதிநிதிகளின் தலைமைப் பேச்சாளரும் அமைச்சருமான ஜி.எல். பீரிஸ் - நாடு திரும்பும் வழியில் லண்டனில், புலிகள் தரப்புத் தலைமைப் பேச்சாளரான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நேரில் சந்தித்துள்ளார். பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவுள்ள புதிய திகதிகள் பற்றி இவர்கள் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)



**க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 'நமது ஈழநாடு' வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.**

## எமது இலக்கு சமஷ்டியல்ல சுயநிர்ணயம்பெற்ற தேசமே

### கட்சிக்கருத்தரங்கில் மாவை சேனாதிராஜா



எங்களுடைய இலக்கு சமஷ்டியல்ல, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எங்கள் தமிழ் தேசத்தில் நாங்களே எங்களுக்கான ஆட்சியை அமைத்துக்கொள்வதே எமது இலக்கு. சிங்கள தேசம் விரும்பினால் ஒரு இணைப்பாட்சியில் நாங்கள் இணையலாம்.

- இவ்வாறு நேற்றைய தினம் ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினா மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் அறிக்கை; கடற்படைத் தளபதி கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

கடற்பரப்பில் - விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்ப்பதற்காக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவால் தயாரிக்கப்பட்ட வழிமுறைகளை, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நிராகரித்துள்ளார்.

இந்த அறிக்கைக்கு தயா சந்தகிரி, கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்திருப்பதாக மேலும் தெரியவருகின்றது. கடற்படை உயர்அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அவர், இந்த முடிவை அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கின்றார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில், சட்டரீதியாக ஒரே கடற்படையே செயற்படும் எனக் கூறப்பட்டிருந்தபோதும், இப்போது புலிகளின் கடற்படையை அங்கீகரிக்கக் கோருவது ஆபத்தானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமஷ்டி ஆட்சி ஏற்பட்டாலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதற்றம் தணியவில்லை எண்ணாயிரம் மக்கள் இடம்பெயர்வு!

மூதூர் வன்முறைச் சம்பவங்களால், 8000 இற்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின்பேரில், உடனடி உலர்உணவு நிவாரணம் வழங்குவதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த மூன்று தினங்களாக மூதூர் அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்து - மூதூர் புனித அந்தோனியார் ஆலயம், மெதடிஸ்த ஆலயம் என்பவற்றில் தங்கியிருந்தவர்களில் 87 பேர், இராணுவப் பாதுகாப்புடன் மூதூரில் இருந்து படகுமூலம் திருமலைக்கு நேற்று அழைத்துவரப்பட்டனர்.

அரசாங்க அலுவல்கள் நிமித்தம் திருமலையில் இருந்து மூதூர் சென்ற அரச ஊழியர்கள், நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார், சிறு குழந்தைகள், இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு திருமலையில் தோற்றவிருக்கும் மாணவர்கள் ஆகியோர் மேற்படி 87 பேரில் அடங்குவர்.

நேற்று நண்பகல் இராணுவப் பாதுகாப்புடன் திருமலையில் இருந்து சென்ற - மெதடிஸ்த குருவான...

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



**...சந்தகிரி சமாதானத்தை சரிக்கிறனெண்டு நிக்கிறார்.**

# ரணில் உத்தரவைமீறி வெளிநாடுகளுக்கு சென்ற மாகாண சபை உறுப்பினர்கள்

## ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவைமீறி - தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 12 மாகாணசபை உறுப்பினர்கள் மீது, விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

தாய்லாந்து, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று சமஷ்டி மற்றும் அதிகாரப்பகிர்வு முறைகள் தொடர்பாக ஆராய, மாகாணசபை உறுப்பினர்கள் திட்டமிட்டிருந்தனர். இந்தப் பயணத்துக்கு, உறுப்பினர் ஒருவருக்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவு ஏற்படும் என்பதை அறிந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களின் பணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பயணத்தை நிறுத்துமாறு ஐ.தே.கவைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களுக்குப் பணித்தார்.

எனினும் - இரண்டு உறுப்பினர்களைத்தவிர, 12 ஐ.தே.க. மாகாண சபை உறுப்பினர்களும், பொ.ஐ.மு உறுப்பினர்களுடன் தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளனர். சிங்கப்பூரில் 'சார்ஸ்' நோய் அச்சுறுத்தலால் இவர்கள் அங்கு செல்லவில்லை.

பிரதமரின் உத்தரவைமீறி வெளிநாடு சென்ற இவர்கள் மீது, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை - ஜே.வி.பி. உறுப்பினர்கள் இப்பயணத்தைப் பகிஷ்கரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# படையினரின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது!

தமக்கு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் அல்லது பத்து லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப் படவேண்டும் எனக்கோரி, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக - சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 69 படையினரும், தமது உண்ணாவிரதத்தை இடைநிறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி - உண்ணாவிரதமிருந்த படையினரின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கியதையடுத்தே இப்போராட்டம் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

### எழுதுவினைஞர் பதவியுயர்வு பயிற்சி வகுப்பு

கடந்த மார்ச் 7 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் கோரப்பட்டிருந்த, எழுதுவினைஞர் தரம் 11 பிரிவு "அ"வுக்கான பதவி உயர்வுப் பரீட்சை, ஜூன் மாதத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு, உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தால், யாழ். மாநகரசபையில் இன்று பி.ப 3 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்றும், தொடர்ந்து சனி,ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 9 மணிக்கும் வகுப்புக்கள் நடைபெறும், என்றும் சங்கத்தின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

### பல்கலைக்கழக மாணவர் கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று இடம் பெறவுள்ளது.

கைலாசபதி கலையரங்கில் காலை 10.00 மணிக்கு இடம்பெறும் இக்கலந்துரையாடலில், முதலாம் வருட மாணவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வருட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### பஸ்நிலையத்தில் இளைஞர் குழு கலாட்டா

மூவர் அடங்கிய இளைஞர் குழுவொன்று, யாழ். பஸ் நிலையத்தில் நேற்று கலாட்டாவில் ஈடுபட்டது. நேற்று நண்பகல் - மதுபோதையில் பஸ்தரிப்பிடத்திற்குவந்த இக்குழு, இளம் யுவதிகளை கேலி செய்ததுடன், காவற்கடமையில் இருந்த காவலாளியையும் வம்புச்சண்டைக்கு இழுத்தனர். இதனைத் தொடர்ந்து பஸ் நிலையத்தில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளிகளாலும், பொதுமக்களாலும் இளைஞர் குழுவினர் நையப்புடைக்கப்பட்டனர்.

## கட்டடப் பொருள்கள் விநியோகத்திற்கான அவசரக் கேள்விப் பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தின் அவசர மீள்குடியேற்ற புனரமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்தவர்களிற்கு வேண்டிய உடனடி புனரமைப்பு வேலைகளிற்காக தேவைப்படும் பின்வரும் கட்டடப் பொருட்களை விநியோகிப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

| தேவைப்படும் பொருட்கள் | அளவு |
|---|---|
| 1. சீமெந்து | - 14,000 பைக்கற்றுக்கள் |
| 2. மலசல கூட பேசின் | - 500 |

மேற்குறிப்பிட்ட பொருட்களை விநியோகிக்கக்கூடிய நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபர்கள் யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதியில் கேள்விப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 2003 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கேள்விப் பெட்டியில் போடுதல் வேண்டும். அன்று பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். செயலக திட்டப்பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

செ.பத்மநாதன்,
தலைவர்/ அரசாங்கஅதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/863)

## நினைவழியா 2 ஆம் ஆண்டு நினைவில்...



வீர வித்தாக - 21-04-2001

### மேஜர் மஞ்சரி

(திருச்செல்வம் சிவச்செல்வி)

(யாழ். மாவட்டம்)

தமிழீழ மாவீரர்கள் தியாக வேள்வித்தீயில் நின்றாடிக் காட்டிய வீரமும், தியாகமும், தமிழுலகம் உள்ளவரை போற்றி வீரவணக்கம் செலுத்துமம்மா.

இன்று உனது நினைவழியா இரண்டாம் ஆண்டினில் உன்னையும் ரூபன் அண்ணா (கப்டன் வேலவன்/மலரவன் - இர.நாதரூபன்) வையும் தமிழுலகுடன் நாமும் வீரவணக்கம் செலுத்தி ஆறுதலடைகின்றோம்.

*தகவல்: இர.சசீதரன் - ரவியண்ணா,*
*வட்டக்கச்சி,*
*கிளிநொச்சி.*

பெரியப்பா, பெரியம்மா,
சகோதரர்கள்.

(318)

### சிறுவிளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

சுன்னாகம் வடக்கில் கே.கே.எஸ் வீதிக்கு சற்றுத் தொலைவில் 21/2 பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு - திருமதி பூமணி அம்மா நடராசா, வருசப்புலம், சுன்னாகம் வடக்கு, சுன்னாகம். (திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கை) (317)


ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30,9.30
(சி-732)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)


## இன்றைய நாள் இனிய நாள்

**21-04-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பலவித செலவுகள், வாக்கு வசீகரம், மனப்பயம், இனசன கொண்டாட்டம். |
| இடபம் | :- வாக்குக் கலகம், சத்துரு பயம், தொழில் கஷ்டம், வீண் பிரயாசை. |
| மிதுனம் | :- வயிறு, மார்பில் வலி, பொருள் நஷ்டம், சத்துரு வெற்றி, அலைச்சல். |
| கர்க்கடகம் | :- நேத்திரரோகம், சத்துரு வெற்றி, சத்துரு பீடை, இனசன விரோதம், தேகசுகம் குன்றுதல். |
| சிங்கம் | :- தர்மகாரிய சித்தி, நற்குணம், தனவரவு, சரீர சுகக் குறைவு, பொருள் வரவு. |
| கன்னி | :- தாரசுகத் தடை, நன்மதிப்பு, சத்துரு பயம், தொழில் சிறப்பு, அதிக நன்மை. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- சோம்பல், வியாதி, தனதானிய நிறைவு, மனமகிழ்ச்சி, வாகன லாபம். |
| விருச்சிகம் | :- கோப மிகுதி, புத்திரரால் கவலை, உயர்ந்த நிலை, புதிய ஸ்தானம். |
| தனு | :- தனித்த நிலை, வயிற்றில் ரோகம், பொருள் நஷ்டம், வீண் பிரயாசை. |
| மகரம் | :- சத்துரு வெற்றி, அதிகார சித்தி, அதிக கவலை, பணவரவு. |
| கும்பம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, தனதானிய நிறைவு, இல்லச் சிறப்பு. |
| மீனம் | :- சிநேக லாபம், நற்கீர்த்தி, பொருள்வரவு, தொழிற் சிறப்பு. |

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி மாகிறெட் லூயிஸ்

(காலஞ்சென்ற லூயிஸ் சவிரிமுத்துவின் அன்பு மனைவி)

இலங்கை மண்ணில் மொட்டாய் மலர்ந்து
யாழ். மண்ணில் விருட்சமாய் விரிந்து
ஹொலண்ட் மண்ணில் உதிர்ந்து போனீர்
மண்ணுலகை நீத்தாலும் – எங்கள்
மனங்களில் என்றும் நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்.

*அன்னாரின் ஆன்ம சாந்திக்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*32/5, அச்சகவீதி,*
*யாழ்ப்பாணம்.*

- ஆரோக்கியநாதர் குடும்பம்.

(சி-861)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### அரசாங்க அதிபர் யாழ்.மாவட்டம்

கோமாரி கப்பல் RRAN/CP/01 மூலம் பெறப்பட்ட அரிசியிலிருந்து சேகரிக்கப்பட்ட பழுதடைந்த அரிசி, தவிடு முதலியவற்றை விற்பதற்கான கேள்வி கோரல்

யாழ். மாவட்ட கோண்டாவில் அரச உணவுக் களஞ்சியத்தில், தற்போது கீழ் குறிப்பிட்ட பொருட்களைக் கொள்வனவு செய்ய ஆர்வமுடையவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| பொருட்கள் | தற்போதுள்ள பொருட்களின் தொகை (கிகி) (தொகையின் அளவு அதிகரிக்கப்படும்) |
|---|---|
| பழுதடைந்த அரிசி | 75,000 |
| தவிடு (புழுங்கல் - சிவப்பு நாட்டரிசி) | 50,000 |

கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 500/-ஐ செலுத்தி யாழ்.மாவட்ட செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் கேள்வி ஆவணங்களையும், கேள்விப் பத்திரத்தையும் 21.04.2003 ஆம் திகதியிலிருந்து 08.05.2003 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய கேள்விப்பத்திரத்தை முகவரியிட்டு யாழ். மாவட்டச் செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 09.05.2003 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். விலைகேள் முறிக்காக மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புச் செலுத்தப்பட வேண்டும். (ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 200.00 படி)

கேள்விகள் மேற்படி பொருட்களின் முழுத்தொகைக்கும் அல்லது, ஒரு மெற்றிக் தொன்னிற்கு குறையாத தொகைக்கும் கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/862)

# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டணி; உடன்பாடு அடுத்தமாத நடுப்பகுதியில்!

## மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ அறிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான உடன்படிக்கை அடுத்த மாதம் நடுப்பகுதியில் கைச்சாத்திடப் படும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஜே.வி.பியுடனான கூட்டணி அமைக்கப்படவுள்ளது தொடர்பாகச் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார். அவர் அப்போது மேலும் தெரிவித்ததாவது,

ஜே.வி.பிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான ஒப்பந்தம் மே முதலாம் திகதி கைச்சாத்திடப்படும் என்று முன்னர் அநுரா பண்டாரநாயக்க தகவல் வெளியிட்டிருந்தார். ஆனால், இது தவறான தகவலாகும்.

மே மாத நடுப்பகுதியில்தான் கூட்டணி உடன்படிக்கையைச் செய்து கொள்ளமுடியும். இந்த உடன்படிக்கையில் சுதந்திரக்கட்சியின் சார்பில் பொதுச்செயலாளரான நானும், ஜே.வி.பியின் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் ஒப்பமிடுவோம்.

இதன் பின்னர், நாடளாவியரீதியில் இரண்டு கட்சிகளும் இணைந்து மாபெரும் பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இரு கட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்படவுள்ள உடன்படிக்கையில் - இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள், நாட்டைத் துரிதமாகப் பொருளாதாரரீதியில் கட்டியெழுப்புதல் மற்றும் ஆட்சி அமைத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்றும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

## மாணவ தலைவர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவினால் - பாடசாலை மாணவ தலைவர்களுக்கான "ஆளுமையும் மனித உறவும்" (Personality and human relations) என்றும் கருப்பொருளில் கருத்துரைகள், கலந்துரையாடல்கள், குழு ஆய்வு போன்ற அமர்வுகளை உள்ளடக்கிய இருநாள் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இன்று மாலைமுதல், நாளை மறுநாள் காலைவரை இல.82, குருசோ வீதியிலுள்ள இளைஞர் ஆணைக் குழுவின் 'அருட்கதிர்' நிலையத்தில் இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவ தலைவர்களும், யாழ்ப்பாணப் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## தொகுதி அமைப்பாளராக மீண்டும் ரிச்சட் பத்திரன

### கட்சி ஆதரவாளர்கள் வலியுறுத்து



(கொழும்பு)

தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரிச்சர்ட் பத்திரனவை, மீண்டும் அப்பதவியில் அமர்த்துமாறு தென்மாகாண சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தென்மாகாண சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கவைச் சந்தித்து இது தொடர்பான தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளனர். இதையடுத்து, மீண்டும் ரிச்சர்ட் பத்திரனவைச் சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளராக நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகத் தமது ஆதரவாளர்களிடம் அநுரா பண்டாரநாயக்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும், இந்த நியமனம் குறித்துக் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என்று அநுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

## நாட்டில் உடனடித் தேர்தலை நடத்த 80 வீதமான மக்கள் விரும்பவில்லை

### பொ.ஐ.மு. கருத்துக் கணிப்பில் தெரியவந்தது

தற்போதைய சூழ்நிலையில் உடனடியாகத் தேர்தல் நடத்தப்படுவதை எண்பது சதவீதமான மக்கள் விரும்பவில்லை என்று பொ.ஐ. முன்னணி மேற்கொண்ட கணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடித் தேர்தல் நடத்தப்படுவது குறித்தும், அடுத்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது பற்றியும் கருத்துக்களை அறிய, கட்சிக் கிளைகள் மூலம் கருத்துக் கணிப்பினை நடத்த உத்தரவிட்டிருந்தார்.

இந்தக் கருத்துக் கணிப்பின் முடிவுகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டன. இந்த அறிக்கையிலேயே எண்பது வீதமான நாட்டு மக்கள் உடனடியாக ஒரு தேர்தலை விரும்பவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அத்துடன், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்த கேள்விக்கு - உரிய பதில் இக்கணிப்பில் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.



மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (46)

## பல்கலைக்கழக ஒழுங்கைப் பேண மார்ஷல்களை நியமிக்கத் திட்டம்

பல்கலைக்கழகங்களில் மீண்டும் மார்ஷல் முறையை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த முறையை அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெறுவது தொடர்பாகத் திறைசேரியின் அனுமதியைக் கோருவதற்கும், அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மார்ஷலாக நியமனம் பெறுபவர்களுக்கு உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பல்கலைக்கழகத்துக்கு ஐந்து அல்லது ஆறு மார்ஷல்கள் நியமிக்கப்படவுள்ளார்கள் என்று பல்கலக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

திறைசேரியின் அனுமதி கிடைத்தவுடன் மார்ஷல்களுக்கான விண்ணப்பம் கோரல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் திறமையான பாதுகாப்பை மேற்கொள்ளும் இவர்கள், மாணவர்களை விசாரிப்பதும், மற்றும் ஒழுங்கு முறையைப் பேணுவதும் இவர்களது கடமைகளில் சிலவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசும் கண்காணிப்புக் குழுவும் தமிழீழத்திற்கு பாடுபடுகின்றன!

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தமிழீழத் தனியரசை உருவாக்குவதற்கே பாடுகின்றதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையில்- மூதூரில் வன்முறைகள் ஏற்பட்டபோது அரசாங்கம் அதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆனால், விசாரணை செய்வதற்காகக் குழுக்களை மட்டும் அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

இது அரசாங்கத்தின் இயலாத் தன்மையையே காட்டுகிறது. அரசு - புலிகளின் சொற்படியே நடந்து கொண்டிருக்கிறது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கிறீன் கிங்ஸ் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள 'கிறீன் கிங்ஸ்' விளையாட்டுக் கழகத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு.கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## நாட்டு நிலைமை பற்றி ஆராய்வதற்கு பொ.ஐ.மு. நிறைவேற்றுக்குழு கூடும்!

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்துப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழு கூடி ஆராயவுள்ளது.

பங்களாதேஷ் விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியவுடன் இந்தக் கூட்டம் இடம்பெறும் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் ரி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வது இக்கூட்டத்தின் பிரதான நோக்கம் என அவர் கூறினார்.

அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் - நாட்டிற்குச் சகல இனமக்களுக்கும் நன்மைபயக்கக்கூடிய வகையில் நியாயமானதாக இருக்கவேண்டும் என்பது கட்சியின் நிலைப்பாடு என்றும் டி.எம்.ஜயரத்ன மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகள் ஊடாக இவ்வாறான நியாயமான தீர்வு ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.




மானிப்பாய் பரிஷ் லியோ கழகம்- ஐ.எம்.எஸ் கணினி நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பித்துள்ள இலவசக் கணினிப் பயிற்சியில் பங்குபற்றும் மாணவர்களின் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

## அரசியல் சாசன மாற்றங்களுக்கு தென்னாபிரிக்கா உதவியளிக்கும்!

### அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசியல்சாசன ரீதியாக மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்குத் தென்னாபிரிக்காவின் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பை வழங்கமுன்வந்துள்ளது.

தென்னாபிரிக்காவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது, தேசிய காங்கிரஸ் கடைப்பிடித்த வழிமுறைகள் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்குப் பெரும் உதவியாக அமையும் என தாம் எதிர்பார்ப்பதாக அந்தக் கட்சியின் தவிசாளரும், தென்னாபிரிக்கப் பாதுகாப்பு அமைச்சருமான லெகோடா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.தே. கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம உட்பட அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# ‘சுபானு’ புத்தாண்டு உங்களுக்கு எப்படி



## துலாம்

(சித்திரை 3 ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் வரை)

### உங்கள் விசேஷத் தனித் திறன்கள்

நேர்மை, நியாயம் ஆகியவற்றில் உறுதி, தவறு செய்பவர் எவராக இருந்தாலும் அதனைச் சுட்டிக்காட்டத் தயங்காத துணிவு, இரக்க குணம், வள்ளல்தன்மை, கவர்ச்சியான பேச்சுத்திறன், பிறரைக் கவரும் முகராசி.

### உங்கள் பலவீனம்

சுகக்குறைவு, நிம்மதியற்ற மனம், பிறரை நம்பிவிடும் பலவீனம், வெளிப்படையான பேச்சுகள், தாராளமாகச் செலவிடல்.

### 14.04.2003 முதல் 16.08.2003 வரை

அஷ்டம ஸ்தானத்தில் பலம் வாய்ந்த ராகுவும், ஜீவன ஸ்தானத்தில் உச்சம்பெற்ற குரு சஞ்சரிப்பதாலும் சென்ற சுமார் 15 மாதங்களாகப் பலவித சிரமங்களுக்கும் ஆளாகி, மனநிம்மதியற்று இருந்த துலா ராசியினருக்குப் பொழுது விடியப்போகிறது விரைவில்! தற்போது ராகு 8 ஆம் இடத்தில் நீடித்துச் சஞ்சரிக்கிறார்.

கிட்டத்தட்ட ரிஷப ராசிக்கும், மேஷ ராசிக்கும் இடையே உள்ள எல்லைக்கோட்டை அணுகிக் கொண்டிருக்கிறார். ஆதலால், இதுவரை ராகுவின் அஷ்டம ஸ்தான சஞ்சாரத்தினால் ஏற்பட்டு வந்த ஆரோக்கியக்குறைவு, படிப்படியாக நீங்கி உடல் நலனில் சிறந்த அபிவிருத்தி ஏற்படும்.

அஷ்டம ஸ்தானத்தில் உள்ள சனி பாக்ய ஸ்தானத்திற்கு மாறுவதால்- செலவுகள் அதிகரிக்கும். எந்நிலையில் சஞ்சரித்தாலும் துலா ராசிக்குச் சனி பகவான் பாதகத்தைச் செய்யமாட்டார் என்ற கருத்து புராதன நூல்களின்படி மிகவும் சரியானதே. இருப்பினும், கோள்சார விதிகளையும் சனி பகவான் மதித்தாக வேண்டுமல்லவா? ஆதலால், சனியின் மிதுன ராசி சஞ்சாரத்தின்போது, துலா ராசியினருக்கு அதிக செலவுகள் ஏற்படும். வீண் செலவுகளில் பணம் விரயமாகும்.

ஜூலை மாதக் கடைசி வாரத்தில் குரு பகவான் லாப ஸ்தானத்திற்கு வருவதால், வருமானம் உயர்வதும், வீடு, நகைகள் ஆகியவற்றில் முதலீடு செய்வதன் மூலமும் பணம் செலவழியும். குடும்பப் பொறுப்புகள் சம்பந்தமாக அதிக அலைச்சல் இருக்கும். ராகு, மேஷத்திற்கு மாறும் வரை ஏதாவது ஒரு சிறு உடல் உபாதை அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கும். மற்றபடி குடும்பத்தில் அமைதியும், ஒற்றுமையும் நிலவும். திருமண முயற்சிகள் கைகூடும். வழக்குகள் வெற்றிபெறும். கணவன்- மனைவியரிடையே அன்னியோன்யம் நிலவும். பெண்கள், பிள்ளைகள் ஆகியோர் அவரவர் துறைகளில் சிறந்த முன்னேற்றம் காண்பார்கள். வாடகை வீட்டிலிருப்பவர்களுக்குச் சொந்த வீடு அமையும். வசதிகள் அதிகரிக்கும். தசா புத்திகள் சுபபலம் பெற்றிருப்பின் திடீர் பணவரவிற்கும் சாத்தியக்கூறு உள்ளது.

### உத்தியோகம், தொழில், வியாபாரம்

பலவித பிரச்சினைகளால் உத்தியோகம், தொழில், வர்த்தகம் ஆகியவற்றில் ஏமாற்றமடைந்து வந்த உங்களுக்கு நம்பிக்கை ஊட்டும் அளவிற்குக் கிரகநிலைகள் அனுகூலமாகவும், வேகமாகவும் மாறிவருகின்றன. உத்தியோகத்தர்களுக்குச் சிறுஅளவில் புதிய சலுகைகள் கிடைக்கும். அலுவலகச் சூழ்நிலை திருப்திகரமாக மாறும். இதுவரை தடைப்பட்டிருந்த பதவி உயர்வை வெகுவிரைவில் எதிர்பார்க்கலாம். தொழிற்துறை அன்பர்களுக்கு மந்த நிலையில் இருந்துவந்த உற்பத்தி மீண்டும் அதிகரிக்கும்.

ஏற்றுமதித்துறையினருக்கு முன்புபோல் பெருமளவில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அதனால், உற்பத்தி பெருகும், நிதி நிலைமை சீர்படும்.

மனதை அரித்து வந்த தொழிலாளர் பிரச்சினைகள் சுமுகமாகவும், நல்லவிதமாகவும் தீரும். துலா ராசியில் பிறந்துள்ள வியாபாரிகளுக்கு ஏமாற்றங்கள் நீங்கி, முன்னேற்றங்கள் அளிக்கக்கூடிய கால கட்டம் ஆரம்பமாகியுள்ளதென உறுதியாகக் கூறலாம்.

### அரசியலில் ஈடுபடுவோர்

துலா ராசியினருக்கே அரசியலில் தீவிர பற்றுதல் உண்டு. பொதுவாகவே பெரும்பாலான துலா ராசியினருக்கு அரசியலில் அதிக ஆர்வமும், ஈடுபாடும் உண்டு. மேலிடத்தின் ஆதரவை முழுமையாகப் பெற்றவர்கள் இவர்கள். பல மாதங்களுக்குப் பிறகு இப்போது கிரகநிலைகள் மிகவும் அனுகூலமாக மாறிவருவதால், கட்சியில் செல்வாக்கு அதிகரிக்கும். வருமானம் உயரும், மத்திய அரசின் ஆதரவும் கிடைக்கும்.

### மாணவமணிகள்

இதுவரை பலவித தடங்கல்களுக்கும், மனச்சஞ்சலங்களுக்கும் ஆளாகிவந்த மாணவமணிகளுக்கு, இப்போது மனம் தெளிந்து பாடங்களில் ஆர்வம் மேலிடும். கிரகிப்புத் திறனும், ஞாபகசக்தியும் அதிகரிக்கும். அன்னியநாடு சென்று மேலும் விசேடக் கல்விபெற விருப்பம் இருப்பின் அந்த ஆசை நிறைவேறும். அதற்குத் தேவையான அனைத்துச் சிபார்சுகளும், உதவிகளும் எளிதில் கிடைக்கும். விசா கிடைப்பதில் எவ்வித பிரச்சினையும் இராது எனக் கிரகங்கள் உறுதி செய்கின்றன.

### விவசாயத்துறையினர்

மழையில்லாமல், அடிப்படை வசதிகளும் குறைந்து, வறண்ட உங்கள் பூமியைப் பார்த்துப் பார்த்துக் கண்கலங்கி, வாடிவருந்திய உங்களுக்கு- அந்தப்பூமி குளிர்வதையும், பயிர்கள் செழித்து வளர்வதையும் காணமுடியும். சிலருக்கு அரசாங்க உதவிகளும், சலுகைகளும் கிடைப்பதற்குக் கிரகநிலைகளின்படி சாத்தியக்கூறு உள்ளது. மேலும், இதுவரை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த கால்நடைகள் பூரண குணமடைந்து அபிவிருத்தி அடையும்.

### பெண்மணிகள்

இதுவரை பட்டுவந்த கவலைகள், வேதனைகள் ஆகியவை இனிப் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருவதை அன்றாட வாழ்க்கையில் காணலாம். குடும்ப நிர்வாகம் சிரமமின்றி நடக்கும். பெண்கள், பிள்ளைகள் ஆகியோரின் படிப்பில் சிறந்த முன்னேற்றம் ஏற்படுவது உங்களுக்குப் பெருமையாக இருக்கும். மனதில் கவலைகள் மறைந்து நிம்மதி பிறக்கும்.

### ஆரோக்கியம்

ராகு தொடர்ந்து அஷ்டம ஸ்தானத்தில் இருக்கிறார். மேலும் குருபகவானும் 10 ஆம் இடத்தில் அமர்ந்து 11 ஆம் இடமாகிய சிம்ம ராசியை நெருங்கிக்கொண்டிருக்கிறார். ஆதலால், சிறுசிறு உடல் உபாதைகள் மேலும் சில வாரங்களுக்கு நீடிக்கும். எனவே, இதுபற்றி இனிக் கவலைப்பட வேண்டாம். கவலைப்பட வேண்டிய நாட்கள் கடந்துவிட்டதே.

தமிழ்நாட்டின் பிரபல
சோதிட சக்கரவர்த்தி
**ஏ.எம்.இராஜகோபாலன்**

### பொருளாதாரம்

மேலும் சில வாரங்களுக்கு நிதி நிலை சாதாரணமாகவே இருக்கும். சனி பகவான் பாக்ய ஸ்தானத்திற்கு மாறுவதால் தொடர்ந்து செலவுகள் அதிகமாகவே இருக்கும்.

### 17.08.2003 முதல் 12.04.2004 வரை

உங்கள் ராசிக்கு 8 ஆம் இடமாகிய ரிஷபத்தைவிட்டு ராகு சப்தம (7) ஸ்தானமாகிய மேஷத்திற்கு மாறியிருப்பது நன்மையைத் தரக்கூடிய கிரக மாறுதலாகும். ஆரோக்கியம் - அபிவிருத்தி அடையும். உடல் உபாதைகள் நீங்கும். அலைச்சல் குறையும். நிதி நிலைமையில் மிக நல்ல முன்னேற்றம் காணமுடியும். குடும்பத்தில் புதிய பொருட்கள், ஆடை, ஆபரணங்கள் சேரும். முயற்சிகளில் வெற்றி கிட்டும். துலா ராசி கன்னியருக்கு மிக நல்ல வரன் அமையும். ஜென்ம ராசிக்கு கேது மாறுவதால், ஆன்மீகச் சிந்தனைகள் அதிகரிக்கும். தீர்த்த, தல யாத்திரை ஒன்றும் சித்திக்கும். மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும்.

(விருச்சிக இராசி நாளை)

# சர்வதேச நாணய நிதியம் 567 மில்லியன் கடன் உதவி!

## வொஷிங்ரன் மாநாட்டின் பின் முடிவு

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் 567 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடன் அடிப்படையில் வழங்க முன்வந்துள்ளது.

உடனடியாக 81 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரத்தைச் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியதாக, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

2003 முதல் 2006 ஆம் ஆண்டு வரையான மூன்று வருடங்களுக்குரிய பொருளாதாரத் திட்டங்களுக்கே இந்தக் கடன் உதவி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் முன்னோடி மாநாடு அமெரிக்காவில் நடைபெற்றதன் பின்னர் இலங்கைக்குக் கிடைக்கும் முதலாவது நிதி உதவி இதுவாகும்.

# வட-கிழக்கு அபிவிருத்திக்கு உதவ தொழில்நுட்பவியலாளருக்கு அழைப்பு!

வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு உலகெங்குமுள்ள தமிழ் தொழில்நுட்பவியலாளர்கள் முன்வரவேண்டும் என்று சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகம் அண்மையில் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பே போரினால் பாதிக்கப்பட்டுள்ள வட-கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்யவும், இந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்யவும் அனைத்துத் தொழில்நுட்பவியலாளர்களும் உதவ முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்திருக்கின்றது.

# நோய் குணமடைய முன்னரே தப்பி ஓடும் நோயாளர்கள்

யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள், நோய் ஓரளவு குணமடைந்ததும் வைத்தியசாலையிலிருந்து தப்பியோடும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த ஒரு வார காலப்பகுதியில் மட்டும் 40 இற்கும் அதிகமான நோயாளர்கள் இவ்வாறு தப்பியோடியுள்ளனர். இவ்வாறு செல்லும் நோயாளர்கள் பின்னர் நோய் நிர்ணய அட்டை, பொலிஸ் அறிக்கை என்பவற்றைப்பெற வரும்போது பலவித சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (111)

# மின்கம்பத்தில் ஏறியவர் மின்சாரம் தாக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்த நிலையிலிருந்த மின் கம்பத்தில் ஏறி மாபிள் கழற்ற முனைந்தவர், மின்சாரம் தாக்கிப் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை மூன்று மணியளவில் சுன்னாகம் ஸ்ரேசனடிப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த செல்வராஜா விமல்ராஜ் (வயது 17) என்னும் இளைஞனே பலத்த எரிகாயத்துக்குள்ளாகித் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சேதமுற்றநிலையில் காணப்பட்ட மின்கம்பத்தின் மீதேறி அதிலுள்ள மாபிளைக் கழற்ற எத்தனித்தவேளை, மின்கம்பத்தில் தீப்பற்றி இளைஞர் மின்சாரத் தாக்கத்துக்குள்ளானார். கம்பத்திலிருந்து தூக்கிவீசப்பட்டு அவர் படுகாயமடைந்தநிலையில் அயலவர்களரல் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (சு)

## வீதி திருத்தப்படாததால் விபத்துக்கள்

புத்தூர் ஊடாக சாவகச்சேரிக்குச் செல்கின்ற வீதி, நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் இப்பாதையால் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

# தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்துள்ள போராட்டத்தை எவரும் முறியடிக்க முடியாது!

## அன்னை பூபதி நினைவு நிகழ்வில் தமிழன்பன்

இனத்தையும், மக்களையும் கவர்ந்து நிற்கின்றது விடுதலைப் போராட்டம். மக்களுடன் இரண்டறக் கலந்துள்ள இந்தப் போராட்டத்தை எவரும் முறியடிக்கமுடியாது. இவ்வாறு நேற்றுமுன்தினம் அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றிய புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - கடந்தகால இடப்பெயர்வைத் தொடர்ந்து - ஆக்கிரமிப்பு இராணுவத்தின்பிடியில் மக்கள் வாழமுடியாத ஒருநிலை காணப்பட்டது.

ஆனால், இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் ‘பொங்கு தமிழ்’ நிகழ்வு மூலம் விடுதலைக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மக்கள் மத்தியிலிருந்த விடுதலை உணர்வினாலும் விடுதலைப் புலிகளின் தீரம், வீரம் என்பவற்றினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அரசு முன்வந்துள்ளது.

இதன் பின்னரும், மக்கள் பல வேறு துன்பங்களையும் அனுபவித்த வண்ணமே இருக்கின்றார்கள். இதற்காக எம்மிடமிருந்து தீர்வுகளை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், மக்களைத் திசைதிருப்பும் நோக்கில் பல்வேறு பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன.

இது திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு. எனவே, எமது மக்களுடன் இரண்டறக்கலந்துள்ள விடுதலைப் போராட்டத்தை எவரும் முறியடிக்கமுடியாது. எமது இலக்குகளை நாம் இன்னமும் முழுமையாகப் பெறவில்லை. எமது இலக்கினை அடைய அனைவரது பங்களிப்பும் மகத்தானதெனக் குறிப்பிட்டார். (சு)

## தொல்புரத்தில் புத்தாண்டுக் கலைவிழா

திருநாவுக்கரசு நாடக மன்றத்தினர் நடாத்தும் புத்தாண்டுக் கலைவிழா இன்று மாலை 7 மணிக்கு தொல்புரம் முத்துமாரியம்மன் ஆலய மோகன் அரங்கிலே நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்ச்சிகளாக மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் தலைமையில் “புதுயுகம் படைக்க புத்தாண்டே எழுந்து வா” எனும் கவியரங்கமும், திருநாவுக்கரசு நாடக மன்றம் வழங்கும் “அரிச்சந்திர மயான காண்டம்” நாடகம் மற்றும் இன்னிசைக்கானம், நடன நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. மேற்படி விழாவில் மகாவித்துவான் வீரமணி ஐயர், காரை எம்.பி. அருளானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஆஸ்பத்திரி ஊழியர் கார்ச் சாரதியால் தாக்கப்பட்டார்

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவர், வைத்தியசாலை வளாகத்தில் வைத்துக் கார்ச் சாரதியால் தாக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை - வைத்தியசாலையில் மரணமாகும் நோயாளர்களின் சடலங்களை எடுத்துச்செல்வதில் கார்ச்சாரதிகளிடையே நிலவும் போட்டியால் நோயாளர்களின் உறவினர்கள் பெரும் இடைஞ்சல்களை எதிர்நோக்குவதாகவும் தெரியவருகின்றது. (111)

# விவசாய ஏற்றுமதி அபிவிருத்திக்கு மருதனார்மடம் சந்தை தெரிவு!

## கிராமிய பொருளாதார அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் புதிய பொருளாதார கேந்திர நிலையம் ஒன்றை ஏற்படுத்தக் கிராமிய பொருளாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக மருதனார்மடம் சந்தை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 20 லட்சம் ரூபா இந்தக் கேந்திரநிலைய அமைப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் இத்திட்டம் பூர்த்தியடையும். இத்திட்டத்தின்படி மீகொட பொருளாதார கேந்திர நிலையத்துடன், மருதனார் மடம் சந்தை கேந்திர நிலையம் இணைக்கப்படும்.

இந்தக் கேந்திர நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் வெளியிடங்களில் விற்பனை செய்யப்படவிருப்பதால், மருதனார்மடத்தினைச் சுற்றியுள்ள விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலையைப் பெறுவார்கள் எனக் கிராமியப் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அம்மா அழாதே

பகுதி 5

குறுநாவல்

ரவி அருணாசலம்



அம்மாவுக்கு இன்னொரு காரியம் ஏலாமல் இருந்தது. வேள்வி இறைச்சியைத்தவிர வேறு எந்த இறைச்சியையும் சாப்பிட முடியவில்லை. இந்த இரண்டு இயலாத காரியங்களும் முரண்பட்டன. எங்கள் வெள்ளை ஆடும் எப்போதும் கிடாய்க்குட்டிகளாகவே ஈனுகின்றன. அம்மாவுக்கு அதுதான் கவலை. அதற்காக அந்த ஆட்டை விற்கவும் விரும்பவில்லை. பிள்ளைபோல் அருமையாய் வளர்த்த ஆடு. களவெடுத்துத் தின்னாது. முளைவிடும் முருங்கையைச் சப்பாது. வளர்ந்துவரும் மாங்கன்றை ஈய்க்காது. புதிதாய் வைத்த பூங்கன்றுகளை மேயாது. எதற்கும் சாணி அப்பி, எங்கள் ஆட்டிலிருந்து எதையும் காக்கவேண்டியதில்லை. வேலி புகுந்து வேறு வளவிற்குப் போகுமோ என்று கழுத்தில் தடிகூடக் கட்டவேண்டியதில்லை. களவெடுக்க ஓடுமோ என்று பின்னங்கால்களைத் தளரவிட்டுக் கட்டவேண்டியதில்லை. வயிறு நிரம்ப அம்மா அதற்குத் தீன் கொடுத்தா. 'வாயில்லா சீவன் பசிச்சாலும் கேக்காது' என்று அள்ளி அள்ளிக் குடுத்தா. அதுபோதும் எங்கள் வெள்ளை ஆட்டுக்கு.

இதற்கு முதல் நின்ற ஆடு களவெடுத்துத் தின்பதில் வலுவிண்ணி. மத்தியானம் சாப்பிடவில்லை நாங்கள். பெரிய பேசினுக்கை மத்தியானத்திற்கும், இரவுக்குமென்று சோறு கிடந்தது. கதவைத் தள்ளி அந்த ஆடு வந்து முழுச் சோற்றையும் தின்றுமுடித்தது. மத்தியானம் எங்கள் ஒருவருக்கும் சாப்பாடில்லை என்பதல்ல அம்மாவின் கவலை. அவாவிலை வயிறு முட்ட முட்டச் சாப்பிட்ட ஆடு, வயிறு வெடிச்சுச் செத்துப்போச்சு. 'சோறு திண்டுதானே செத்தது. ஆருக்கும் இறைச்சிக்குக் குடுக்கலாம்' எண்டார் அப்பா. ஆடு செத்த கவலையிலை அம்மா இருந்தா. அப்பா இப்பிடிச் சொன்னது ஆத்திரத்தையும் தந்தது. அம்மா எலுமிச் சம்பாத்தியுள் வெட்டித் தாப்பிச்சுப்போட்டா. ஆட்டைத் தாக்கிறபோதும் செல்லத்துரையண்ணை சொன்னார் 'என்னெணை சோறுதானே திண்டது. பங்கு போட்டிருந்தாலும் அஞ்சாறு நாளைக்குப் பிழையில்லை.' அம்மா 'இஞ்சார் உந்தக்கதை கதையாதை. நாங்கள் வ்ளத்தால் அது எங்கன்ரை பிள்ளை மாதிரி' என்று 'எக்கணம் கிடாய்க் குட்டிகளை ஈண்டால், அதுகளை இறைச்சிக்குக் குடுக்கத் தானே போறியள்.

அம்மா பிறகு வளர்த்த வெள்ளை ஆடு வருசாவருசம் கிடாய்க்குட்டிகளாகவே ஈன்று தள்ளியது. கிடாய்க்குட்டிகள் மண்ணில் விழுகிறபோதே, குட்டிகளின் அடிக்கால் நகங்களைக் கூர்க்கத்திகொண்டு வெட்டுகிறபோதே, இளங்கொடியைக் கொண்டுபோய் சுடலை ஆலமரத்தில் கட்டுகிறபோதே, அம்மாவுக்கு மனம் நோகத்தொடங்கும். இறைச்சி ஆகப்போகிற குட்டிகள் மீது இரக்கமும், செல்லமும் பெருகும். ஆக மிஞ்சினால் ஒரு அஞ்சு மாசந்தான் இரக்கமும், செல்லமும். ஒரு குட்டி செல்லத்துரையண்ணையிடம் போயிடும். ஒரு குட்டியைத் தன் கொட்டில் தாண்டி வேறு எங்கயும் போகவிடார். கவுணாவத்தை வேள்விக்கு ஒரு மாடாகவோ, மரையாகவோ ஆக்கிவிடுவார். மற்றைய குட்டி - மடத்தடி தாண்டியோ, இலகடி தாண்டியோ, செட்டிச்சோலை தாண்டியோ, கிராயிட்டி தாண்டியோ, குரும்பகலட்டி தாண்டியோ, தம்பாகலட்டி தாண்டியோ, சாத்தாகலட்டி தாண்டியோ ஆக மிஞ்சினால் தஞ்சிட்டி தாண்டியோ கண்காணாத் தேசத்திற்குப் போய்விடும். அது என் குட்டியாயிருந்தால் என் கவலை நெடுநாள் நிற்கும். என் கனவில் அது காலையில் விட்ட இடத்திலிருந்து ஓடிவந்து, முளைக்கும் கொம்பால் இடித்து நிற்கும். 'ரொமி' நோகாது கடிப்பதுபோல, கிடாய்க்குட்டிகள் வளரும் கொம்பினால் இடிப்பது மகாசுகம். அந்த சுகத்தை ஒவ்வொரு வருசங்களிலும் பெற்றுப்பெற்று இழந்தேன்.

செல்லத்துரையண்ணரின் ஆட்டுக்கொட்டிலுக்குப் போனால் அதைப் பெறலாம். பக்கத்திலும்தான். ஆனால், அங்கு போனவுடன் எங்கன்ரை கிடாய்க்குட்டி, சாமத்தியப்பட்ட பெட்டைகள் மாதிரி அடங்கிக்கிடக்கிறது. தழைநாரால் வரிந்து கால்கட்டுப்போட்டு, கட்டையில் அடிப்பட்டு நிற்கிறது. செல்லத்துரையண்ணையும் பிறகு கிடாயைப் பார்க்க விடுவதில்லை. நாவூறு பட்டுப்போகுமாம். வேள்விக்கு முதல்நாள்தான் கிடாயென்று ஒரு மாட்டை நான் பார்ப்பேன். எங்கள் வீட்டில் ஓடித்திரிந்த குட்டியென்று அதை நான் ஒரு சொட்டும் நம்பமாட்டன். கழுத்தில் இரண்டு சணல் இருக்கும், தாடி முளைத்திருக்கும், பெருத்த கொம்பிருக்கும், பார்வையில் மிடுக்கு இருக்கும், ஆணவம் தெறிக்கும், தடவிக்கொடுத்தால் கழுத்தை உதறிக் கையை அப்பால் தள்ளும். அப்போது, பிரிவின் வேதனை ஒன்று என்னைத் தொடும். எல்லாம் மறந்தனையோ? விடிய எழுந்து, எழுந்த உடன் ஓடிவந்து, குட்டிகளைப் பார்த்து, என்னைக் கண்டவுடன் துள்ளித் துள்ளி ஒரு பக்கமாக ஓடி, குட்டிகள்போல் முழங்கால் சிரட்டைகள் நிலத்தில் முட்ட, இரண்டு கைகளையும் ஊன்றிக்கொண்டு, குட்டிகளின் நெற்றியுடன் எனது நெற்றியை இறுக்கி முட்டப்பண்ணி, இடிபழக்கி அப்பிடியே தூக்கிக்கொண்டு கிளுவங்குருத்துக்கள் புடுங்கித் தின்னப் பண்ணி... எல்லாம் மறந்தனையோ?

இனி அன்பு வைச்சு குட்டிகளை வளர்க்கிறேல்லை என்று அப்போ சபதம் செய்வேன். விடும் சபதம் காற்றில் அள்ளுப்பட்டுப்போய்விடும். அன்பு வைக்காமல் எப்படி வாழ்வது? அன்பு வைத்துத்தானே அம்மா வாழ்வில் இடர்ப்படுகிறா.

அம்மா கிடாயைப் பார்க்க வரமாட்டா. வில்லங்கப்படுத்தினாலும் 'நீ விருப்பமெண்டால் போய்ப்பார்' என்று ஏசுவா. கெஞ்சினால் 'என்னெண்டு ராசா பாக்கிறது? பாத்தால் அது தானே திரும்பத் திரும்பக் கண்ணக்கை நிக்கும்' என்பா. என்று சொல்லிக் கண்கலங்கப் பாக்கும். அப்பாவிற்கு எதற்கெடுத்தாலும் கண்ணீர் முட்டும். படத்திலும் ஆரும் சாகவேணுமெண்டில்லை. இரங்கிக் கதைத்தாலும் கண்ணீர் ஊத்துண்ணும். அம்மா, தான் அன்பு வைத்த உயிரினங்களை நினைந்தும், அம்மாளை வேண்டுகிறபோதும்தான் அழுவா. சட்டென முட்டிவந்த அழுகை அல்ல. உணர்வு நெகிழ்ந்து, நெஞ்சு கசிஞ்சு கண்வழி தெரியும்.

கவுணாவத்தை வேள்வியிலன்று அம்மாவின் மனசில் செத்தவீடு இருக்கும். எங்களது ஒரு கிடாய்க்குட்டியைச் செல்லத்துரையண்ணர் பலியாக்கக் கொண்டுபோவார். சோடியின் மற்றைய குட்டி செட்டிச்சோலையிலிருந்தோ, தம்பாகலட்டியிலிருந்தோ பலியாகப்போகும். அது தரும் துயரை நான் பெரிதாக உணர்ந்தேனன்று. அம்மா படும் துயரை உணரமுயன்றேன். வாழ்வு அள்ளிக்கொண்டு வருகிறது, இப்பிடி எவ்வளவு பெரிய சோகங்களை!

அன்று வீட்டில் பெருவிருந்து நடக்கும். இறைச்சியில் வகை வகையான கறிகள். சின்னமாமா கொஞ்சமாய்க் குடித்துவிட்டு வருவார். ஆசை மாமா நிறையவாய்க் குடித்துவிட்டு வருவார். நாணோயா மாமா நின்றால், இரண்டு போத்தல் கள்ளு வாங்கி, கோடிக்குள் வைத்துவிட்டு 'தங்கச்சி' கொஞ்சக் கறிதா' என்று அம்மாவிடம் கேட்பார். அம்மா சிரட்டையில் கறியையும், பெரிய கிளாசையும் குடுப்பா. இறைச்சி ஒரு துண்டு, கள்ளு ஒரு மடக்கு. எனக்கும், அக்காவுக்கும் இறைச்சியைத் தீத்துவார். 'மச்சான் கொஞ்சம் கள்ளுக் குடியுங்கோவன்' அப்பாவைக் கேட்பார். ஈரல் துண்டுகளை எடுத்து அடுப்புக்குள் போட்டு, அது வெந்த பிறகு சாம்பலைத் தட்டி, பிய்த்து ஆவிபோக ஊதித் தீத்துவார். அப்பாவிடம் பொயிலை வாங்கி 'சுத்து' பத்திக் கொண்டு, வாய்க்காலை எலுமிச்சம்பாத்திக்கு வெட்டிவிட்டு, அரப்புத் தேய்ச்சு அள்ளி அள்ளி முழுகுவார். கிணறு வத்தும்போலை இருக்கும்.

'உந்தக் குடிகார நாய்கள் நிக்குங்கள். நான் வரமாட்டன்' என்று சொந்தச் சகோதரங்களையே திட்டிவிட்டு, மடத்தடி மாமா வரமாட்டார். அம்மா சருவச் சட்டிக்கை இறைச்சிக்கறி தருவா. கொண்டுபோய்க் குடுப்பன். 'வீட்டிலை ஆர் நிக்கினம்?' கேப்பார் மடத்தடி மாமா. 'சின்னமாமா, மூத்த மாமா, நாணோயா மாமா' என்பேன். 'பெரியவர் வரேல்லையோ?' என்று ஆசை மாமாவைக் கேப்பார். 'குடிச்சுப்போட்டு எங்கை வேலி வழிய தவளுதோ?' என்று ஒரு வசை இருக்கம். மடத்தடி மாமாவிற்குக் கோபத்தில் கண் சிவக்கும், நாணோயா மாமாவிற்கு முழுகிக் கண் சிவக்கும், மூத்தமாமா பீடி குடிச்சாலே கண் சிவந்து நிற்பர்.

(தொடரும்)

# நூல் அகம்




தேடலும், படைப்பிலக்கிய உந்தலும்கொண்ட இளைஞர் குழுவின் அயராத முயற்சியினால் புதிய சிறுசஞ்சிகையொன்று யாழ்ப்பாண மண்ணுக்குக் கிடைத்துள்ளது. 'அங்குசம்' என்ற பெயரோடு அது இலக்கிய வானில் உலாவரத் தொடங்கியுள்ளது. எல்லா இலக்கிய வடிவங்களையும் தாங்கி வெளிவர முடியாத இக்கட்டுநிலை வெகுஜனப் பத்திரிகைகளுக்கு உண்டு. அதற்குப் பல்வேறு காரணங்களும் உண்டு. இந்தநிலையில், அந்த இடைவெளியை நிரப்பும் சாதனங்களாக இச்சிறுசஞ்சிகைகளே விளங்குகின்றன. இவை ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினரையே சென்றடைவதால, தரம்வாய்ந்த கட்டுக்கோப்பான ஆக்கங்களைத் தாங்கி வரவேண்டிய தேவை இருக்கிறது. இதனால், எல்லாமட்ட வாசகர்களுக்கும் தீனிபோட இவற்றால் முடிவதில்லை. எனினும், அந்தக்கால கட்டத்தின் சமூகநிலையைத் துல்லியமாகப் படம் பிடித்துக்காட்டும் கமராக்களாக இவை தொழிற்பட்டு வருகின்றன.

அந்தவகையில், வெளிவந்துள்ள 2003 ஜனவரி- பெப்ரவரி 'அங்குசம்' இதழை நோக்கினால் - கவிதை, சிறுகதை, கட்டுரைகள், துணுக்குகள் எனப் பல்வேறு வடிவங்களும் அதன் பக்கங்களை நிரப்புகின்றன. இதிலுள்ள சிறப்பு யாதெனில், மூத்த எழுத்தாளர்களின் படைப்புகளும், இளைய தலைமுறை பேனா பிடிக்கும் கரங்களின் கீறல்களும் ஒருங்கே இடம்பெற்றுள்ளமையாகும். மற்றும் மருத்துவக் கட்டுரை, வங்கி சம்பந்தமான சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் அமைந்த முகம் என்ற பத்தி, நூல் அறிமுகம், ஆங்கிலத்தொடர், சுயதொழில் வழிகாட்டி, கராத்தே கலை பற்றிய விளக்கம் போன்ற காத்திரமான விடயங்கள் அங்குசத்தின் பக்கங்களாக விரிந்துள்ளன. பாடசாலை மாணவர் மத்தியில் பொது அறிவையும், விவேகத்தையும் வளர்க்குமுகமாக அறிவுப்போட்டிகளையும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் ஆசிரியர் குழுவினர். பண்டிதர் க.சச்சிதானந்தன் பற்றி பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் பத்திரிகை ஒன்றிலே எழுதிய குறிப்புரை அங்குசத்தின் பிற்பகுதியைக் கனதியாக்கியுள்ளது. சஞ்சிகையின் பின் அட்டை பண்டிதரின் படத்தைத் தாங்கி, அவர் பற்றிய குறிப்புகளோடு 'சிகரம்' என்ற தலைப்பில் தீட்டப்பட்டுள்ளது. இறுதியாக ஆசிரிய பீடத்தினரின் கருத்தாக வெளிவந்திருக்கும் இச்சஞ்சிகை, ஒரு குறித்த மதக் கடவுளருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டதென்பது மதச் சார்பின்மையை வலுவாக்க ஒருபோதும் உதவப்போவதில்லை என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. மேலும் தொகுப்பிலும், அமைப்பிலும் கூடிய கவனம் செலுத்தியிருக்கலாம்.

- எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.

# இலக்கியச்சோலை

## கொங்கோ நாட்டுக் கவிதை

## ஒரு கை நிறைந்த செய்திகள்

நல்ல மனம் கொண்டோரின்
நீர்க் குடுவைகள் மீது
நீரலைகளை வருடச் செய்யும்
சதுப்பு நிலங்களின் மேலே
குன்றுகளின் முதுகுகள்
புறங்கவிந்து கொள்கின்றன.

எரிகின்ற பட்டயங்கள் போல்
துரோகத்தின் வதந்திகள்
பரவுகின்றன
ஊட்டமளிக்கும் குருதியினால்
பூமியின் நாளங்கள் புடைக்கின்றன
கொம்புகளும்
துழாவிப் பிடிக்கும் கொடுக்குகளும்
கொண்ட
பூதங்கள் நிறைந்த
நகரங்கள் கிராமங்கள் குக்கிராமங்கள்
காடுகள் வனங்களாலும்
இந்தப் பூமி நிறைந்திருக்கிறது.
அவர்களின்
நீண்ட பிடரி மயிர்கள்
சூரியன் முகம் பார்க்கும்
கண்ணாடியாய் இருந்தன.

இரவு வரும் வேளைகளில்
வெளவால் கூட்டங்களை
ஏவி விடுபவர்களும்
அச்சம் என்ற கல்லில்
தங்கள் ஆயுதங்களை
கூர் தீட்டிக் கொண்டவர்களும்
இவர்கள் தான்.

படுநாசம் என்ற
அடிமைக் கப்பல்கள் மீது
வீசும் காற்றலைகளில்
குற்றவாளிகளின் ஆன்மாக்கள்
மிதக்கின்றன.
பூமியிலுள்ளோர் பூசல்கள் பற்றி
அவர்கள்
அக்கறை கொள்ளவில்லை
மின்னலிடம் பறித்தெடுத்த
தீக் கொடுக்குகளால்
அவர்களது வைர நெஞ்சங்கள்
இழைக்கப்பட்டிருந்தன.

சந்தேகமேயில்லை
அந்த வெறுப்பு
ஒருபிடி
புகையும் தசையினால்
ஆனதாகத்தான் இருக்கவேண்டும்.
சந்தேகமேயில்லை
அந்த ஆன்மாக்கள்
பழிதீர்க்கும் செபமாலையை
உருப்போட்டபடிதான்
இருக்க வேண்டும்.

ஆனால்,
கொடூரத்தின்
கறுப்புக் காதுகள் போலவே
பிடிவாதம் என்ற
உலோக முட்சாட்டை
பேசிய
இருளார்ந்த மொழியின்
ஒரு சொல்லைக் கூட
ஒருபோதும் அவர்கள்



புரிந்து கொள்ளவில்லை.
அதற்கெதிராக
பாம்பாட்டியின் கோபமோ
எறிகத்தியின் வன்செயலோ
ஏதும் செய்ய முடியவில்லை.

*ஆங்கிலத்தலைப்பு:* **A Fistful of News**
*எழுதியவர்:* அன்ரொய்ன் போலாம்பா
*நாடு:* கொங்கோ
*தமிழில்:* வின்சென்ற் புளோறன்ஸ்

*கவிஞர் பற்றிய குறிப்பு:*
முன்னைய பெல்ஜிய கொங்கோவில் பிறந்தார். அவர் ஆசிரியராகவிருந்த **La Voix du Congolaise** என்ற விமர்சன இதழிலே பல கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதியுள்ளார். செசயரின் தாக்கம் இவரில் இருக்கிறது. **E Sanso** என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார்.

# A-9 ஐ நீளும் நினைவுகள்




ஆனை இறவோ தனித்தொரு தீவென
A-9 தனில் உறைந்து இருகிற்று
"யார் வசம் இது உள்ளதோ... அப்படை
யாழை மீட்டு(கு)மாம்"... வேதம் ஒலித்தது.
ஆயத்தம் பல எங்கும் நடந்தன.
"அடிவிழும்" என ஊர் எதிர்பார்த்தது
"நாளை, நாளையோ" என்கையில்... ஓர்இரா...
நர்த்தனந் தனைப் போரும் தொடங்கிற்று.

ஆனை இறவின் மேல் இடிகள் இறங்கின
'ஆகாயக் கடல் வெளிச்சமர்' என்றொரு
பேரில் ஓர் புதுப் போர்முகம் காய்த்தது
பெரிய மோதல் வெடிக்க... மறப்படை
ஓர் பெரிய மரபுப் படையென
உயர்ந்து... நேருக்குநேராய்ப் பொருதிற்று
A-9 அதன் இருமுனையூடாயும்
எரிமலைக் குழம்பாய்ச் சமர் பூந்தது.

வானிலேறியே வந்த விமானங்கள்
வட்டமிட்டுமே குண்டு வீதைத்தன.
வானை நோக்கி முழங்கிற்று.. 'தீக்குழல்'
வந்த பட்சிகள் உயரக் கிளம்பின.
வேகவீதம் உயர்ந்தது... வீரர்கள்
வீழவீழஉப் பளத்துள் நுழைந்தனர்.
சாவு... உப்பு மலையூடு வந்திட...
தடுத்திருந்தனர் இராணுவ வீரர்கள்.

- ஜெயங்கொண்டான்.

# கிழக்கும் மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார் - அமிலஸ் எட் அமிலஸ்




இது கண்ட அடியவர் தொண்டரைப் பார்த்து
"ஆறு மாதத்துக் கொருமுறை உணவு உண்ணும்
நாமுண்ணும் வரையிலும் காத்திருக்காது உணவு
எந்நாளும் உண்பவர்க்கு அவசரமேன்" எனக்
கேட்ட அடியவர் தொண்டரைப் பார்த்து
"நம்முடன் அமர்ந்து உணவு அருந்திட
உமக்குப் புத்திரன் இருந்தால் அழைப்பீர்" என்றார்!
அதுகேட்ட தொண்டர் அடியாரைப் பணிந்து
"இப்போது எமக்கவன் உதவான்" என்றார்!
"அவன் வந்தாலே நாமுண்போம்" என்றார் அடியவர்!
"அடியவர் இன்னமும் உணவுண்ண வில்லையே" என
துக்கித்த வண்ணம் தொண்டர் நங்கையுடன்
இல்லத்தின் வெளியே வந்து நின்ற வண்ணம்
"புதல்வா வா" எனக் கூவி அழைத்தார்!
"சீராளனே! அடியவர் தம்முடன் அருகிருந்து
உணவு அருந்திட அழைக்கிறார் வா" என்று
அன்புடன் அழைத்தார் அன்னையாம் நங்கையார்!
அப்போது, சீராளன் பள்ளியிலிருந்தோடி
வருபவன் போல - வழமை போல - ஓடி வந்தான்!
மகிழ்வுடன் அவனை வாரியணைத் தெடுத்துடன்
"இனியேனும் அடியவர் தடையின்றி உண்ணுவார்"
என்றெண்ணியவண்ணம் வீட்டினுடன் சென்றனர்!
வீட்டினுள் இருந்த சிவனடியாரை
அவ்விடம் காணாது உள்ளம் கலங்கினர்!
அடியவர் முன்பாகப் படைத்த உண்வும்
அவ்விடம் இன்மையால் அனைவரும் கலங்கினர்!
"அடியவர் எங்கேயாகிலும் ஒளித்துள்ளாரோ?" -
என்றெண்ணி வீட்டுள்ளும் புறத்தும் தேடியும்
காணாதுளம் கலங்கியபடி வெளியே வந்தனர்!
சிறுத்தொண்டர் செய்திட்ட செயல்கள் யாவும்
பக்தியின் உ(ய)யிர்நிலை ஒளிர்வதாய் அமையவே
ஏற்றுக் கொண்டருளிய சிவபெரு மானார் -
இந்திரன் முதலான தேவர்கள் முனிவர்கள்
சேவித்து நின்றிட - உமையவளுடனே -
நாயனாரும் மனைவியும் மகனும் தாதியாரும்
கண்டுள்ளம் மகிழ்ந்திட - இடபத்திலமர்ந்து
வான வீதியில் அருட்காட்சி தந்தனர்!
வானவர் மலர்தூவி தொண்டரை வாழ்த்தினர்!

(தொடரும்)

# யோகம்மாவின் பிள்ளைகள்

## பஞ்சாட்சரம் கதைகள் 7



"யார் யோகம்மாவின் ரமணனே?, "எட நீ யோகம்மாவின் பொடியன் எல்லோ?" தன் அப்பாவின் ஊரிற் சனங்களே இப்படிக் கேட்பது ரமணனுக்கு என்னவோபோல் இருந்தது. தான் புகுந்த ஊரிற்கூட குடும்பத்தில் முதன்மை பெறும் அளவிற்கு யோகம்மா ஒன்றும் கெட்டிக்காரியோ, கொடை வள்ளலோ, கற்ற மேதையோ இல்லையே! அப்பாவும் தாம் பிறந்த ஊரிலேயே முகவரி இழந்தது எப்படி?. இளமையிற் தகப்பனை இழந்துவிட்ட, அல்லது தகப்பன் பெயர் தெரியாத அல்லது ஒழுக்கங்கெட்டவள் பெற்ற பிள்ளைகள்தான் தாய் பெயரோடு அழைக்கப்படுவது உலக வழக்கம்.

மனக்குழப்பத்தோடு தந்தை நமசியிடம் சென்று கவலையோடு நடந்ததைச் சொன்னான் ரமணன். வேதனையோடு சிரித்த நமசி, "வேறப்படி அழைப்பார்கள்?" யோகம்மா எனக்கு மனைவியாக நிச்சயித்தெழுதப்பட்ட பின்புதான் அவள் ஊரவர்கள் சொன்னார்கள் "ஆண்கள் வீட்டில் இருக்கவும், பெண்களே போய் வீடு வரும் ஆண்களுடன் கதைக்கின்ற வழக்கமுள்ள வீடு உது" என்று! அது உண்மைதான் என்பதைத் திருமணத்தின் பின்பு நான் கண்டுகொண்டு, யோகம்மாவுக்குப் புத்தி சொல்லிப் பார்த்து கண்டித்துப் பார்த்துத் திருந்தாத நிலையில், மிரட்டத் தொடங்கியபோது குடும்பப் பழக்கத்தை மாற்ற முயன்றும் முடியாத அவள், என்னை மடக்கி வைக்கத் தீர்மானித்தாள். நான், தன்னைத் தனிமையில் கொடுமைப்படுத்துவதாக நீலிக் கண்ணீர் வடித்தும், என்னை வடுப்படுத்தும் கட்டுக் கதைகளைச் சொல்லியும் தன் குடும்பத்தார்- என் குடும்பத்தாரை நம்ப வைத்து, அவர்கள் மூலமும், குறிப்பாகப் பிள்ளைகளின் மிரட்டல் மூலமும் என்னை அடக்கத் தொடங்கினாள். நான் வேறுவழியின்றி ஒதுங்கிக் கொண்டேன். அவள் இன்னும் சுதந்திரமாக எல்லைகள் அனைத்தையும் மீறி நடந்து, இந்த ஊரிலும் போன போன ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வோர் கிசுகிசு 'புராணத்துக்குக் கதாநாயகியாகிவிட்டாள்.

தந்தை பாசத்தை நம்பமறுத்த பிள்ளைகள் இன்று உலகத்தின் வார்த்தையில் யோகம்மாவின் பிள்ளைகள் என்று பெயர் சூட்டப்பட்டு நிரந்தர நரக வாழ்க்கைக்காளாகி நிற்கிறார்கள்.

கூறிமுடித்த நமசி - விம்மி விம்மி அழுதார். "நான் என்ன செய்வேன்" என்று தேம்பினார்.

# பாலையும் சோலையும்

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

பத்து வயதிலேயே நாவல்கள், சிறு கதைகள். விக்கிரமாதித்தன் கதை போன்ற அற்புத சம்பவக்கதைகள் என்று பலவும் வாசித்தும், பாரதக் கதைகள் போன்றவற்றைப் புரிசை. செஞ்சொற்கொண்டல் முருகேச முதலியார் மூலம் கேட்டும், வயதைக் கடந்த ஒரு வெம்பல்நிலை என்னில் ஏற்பட்டிருந்ததை முன்னரே கூறியுள்ளேன். ஆண்-பெண் உறவு, காதல் முதலியன பற்றி மங்கலான கருத்துக்கள் சிலவும் அந்தச் சின்னஞ்சிறு பருவத்திலேயே ஏற்பட்டிருந்தன என்றுகூற நான் கூசவில்லை.


ஏனெனில், மகாகவி பாரதிக்கே ஏழு வயதுப்பராயத்தில் ஏற்பட்ட கற்பனை உணர்ச்சிகள், கேவலம் மிகச் சாதாரணனான எனக்கு ஏற்படப் புத்தகக் கணங்களோடு உண்டான உறவும், கேட்டவை, கண்டவை தொடர்பான கேள்வி, காட்சி அனுபவங்களும் எனது பதினான்கு வயதிலேயே காதல்கதை எழுதத் தூண்டின. ஆம்! நான் முதன்முதலில் எழுதி, வீரகேசரியிலே வெளியான 'தியாகம்' சிறுகதை காதலோடு தொடர்பானதுதான்.

இவற்றோடு வயது வளர வளரப் பாலியல் தொடர்பான ஆர்வங்களும், கனவுகளும் வளர்ந்தன. ஆனால், காதல் செய்யக்கூடிய துணைச்சலோ, சந்தர்ப்பங்களோ அக்காலத்தில் எனககு இருக்கவில்லை என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும். பல விடயங்களிலே தீர்மானம் எடுக்கமுடியாதவனாய், கோழையாய் இருந்ததால் என் பாலுணர்ச்சிகளும், காதல் ஏக்கங்களும் மானசீகமானவையாகவே இருந்தன. இதனால், என்னை அப்பாவி என்றோ, கையாலாகாதவன் என்றோ என் நண்பர்கள் கொண்டு என்னைச் சீண்டியதும், கேலிசெய்ததும் உண்டு. ஆனால், என் அகத்தைப் பொறுத்தவரையில் நான் எக்காலத்திலும் பரிசுத்தவானாய் இருக்கவில்லை. நான்கொண்ட காதல் கருச்சிதைவடைந்த கதை மிகவும் சுவாரசியமானது. ஸ்ரான்லியில் கருக்கொண்டு அங்கேயே சிதைவடைந்த கதை அது.

நான் படித்த வகுப்பிலே இரு சகோதரிகளும் படித்தவர்கள். தமிழ்ப் பாடசாலை ஒன்றிலே எஸ்.எஸ்.ஸி. பரீட்சைக்குத் தோன்றிச் சித்தியடையாமல், ஆங்கிலம் படிக்க வந்தவர் மூத்தசகோதரி. எஸ்.எஸ்.ஸி. வகுப்பில் படித்துப் பரீட்சைக்குத் தோற்ற முன்பே விலகி, ஸ்டான்லிக்கு வந்தவர் இளையசகோதரி.

மூத்தசகோதரி என்னிலும் வயதில் மூத்தவள். இளையசகோதரி என்னிலும் இரண்டு ஆண்டு இளையவள். இருவரும் பெரும் அழகு சுந்தரிகள் என்பதற்கில்லை. மூத்தவர் பந்தயக்குதிரை வாகுகொண்டவர். கட்டுக்கோப்பான உடல் படைத்தவர். இளையசகோதரி சற்று இரட்டைநாடி சரீரம் பெற்றவர். ஆனால் அவரின் கண்கள்...!

உண்மையில் இன்றுவரை அந்தக் கண்களைப் போன்ற காந்தசக்தி படைத்த கண்களை நான் கண்டதில்லை (எழுபத்தொரு வயதான என் மனைவி என்னை மன்னிப்பாராக). இந்தக் கண்களின் சிறப்பைத்தான் எனது 'கடைசி ஆசை' கதையிலே வருணித்திருக்கிறேன்.



நான் இளையவள் மீது தாழாத காதல் கொண்டேன் என்று சொல்ல வேண்டியதில்லை. என் அந்தரங்கங்களை அந்தக் காலத்திலே பகிர்ந்துகொள்ளக் கிடைத்தவன் என் உயிர் நண்பன் நடராசா. (இந்தியாவில் மனைவி, மூத்தமகள், பேரர், பேர்த்தியரோடு வாழ்ந்தவண்ணம்- நோர்வேயிலிருந்து மக்களின் பணவரவால், எவ்வித குறையுமின்றிக் 'குடியும் குத்தனமுமாக' இருந்து அண்மையில் காலமாகிவிட்டான்).

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.
- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## தமிழகத் தலைமையின் தமிழின எதிர்ப்புணர்வு !

தமிழகத்தில் - தமிழுணர்வாளர்களைக் குறிவைத்து நடாத்தப்படும் வேட்டையும், அராஜகமான ஆட்சியும் அங்கு எதிர்ப்புணர்வலைகளை சம்பாதிக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஈழத்தமிழர் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் - மாறாத வன்மம் பாராட்டுபவராகவும், ஈழத்தமிழர்களை ஆதரிக்கும் எவருமே பயங்கரவாதிகளெனவும் சித்திரித்து - தனது தனிப்பட்ட கோபதாபங்களை நாளுக்கு நாள் தமிழுணர்வாளர்கள் மீது செலுத்தி சந்தோஷம் அனுபவிக்கும் குரூர மனங்கொண்டவராக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நடந்து வருகின்றார்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகராகவும், தமிழக முதலமைச்சராகவும் இருந்து - ஈழத்தமிழர்கள் மீது பாசமும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது அனுதாபமும் கொண்டு - என்றைக்கும் தளர்வில்லாத, உறுதியான ஆதரவை அளித்து வந்த எம்.ஜி.இராமச்சந்திரனின் வழிக்கு முற்றிலும் மாறுபட்டவராக - ஈழத்தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட விரோதப்போக்கை கடைப்பிடித்து வரும் ஜெயலலிதா - ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளித்துவரும் தமிழுணர்வாளர்களைத் தொடர்ச்சியாகக் கைது செய்து சிறையிலடைப்பதன் மூலம் - தமிழகத்தில், தமிழின உணர்வை மேலோங்கவிடாமல் தடுத்துவிடுவதிலும், ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்திற்கும அரசியல் இலக்கிற்கும் தமிழகத்திலிருந்து ஆதரவுக் குரல் கிடைத்துவிடாமல் செய்வதிலும் - தீவிரமான செயற்பாட்டை மேற்கொண்டிருக்கிறார்.

அவருக்கு இணையாக - 'பொடா' சட்டமும் கைகொடுக்க, இந்தியாவில் வேறெந்தப் பகுதியிலும் நடைபெற்றிராத வகையில் - விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக யார் பேசினாலும் அவர்களைக் குறிவைத்துத தாக்குவதே தனது முக்கிய பணியென அவர் நடந்து வருகின்றார்.

ஏற்கனவே - தனது பகட்டான செயற்பாடுகளாலும், முறைதவறிய அதிகாரப் போதையாலும் - நாளுக்கு நாள் தமிழகமெங்கும் எதிர்ப்பைச் சம்பாதித்துவரும் ஜெயலலிதா - தமிழுணர்வாளர்கள் மீது மேற்கொள்ளும் இந்த அடாவடித்தனங்களுக்கும் - தமிழக மக்களிடமிருந்து சரியானதொரு பதிலைப் பெறும்நாள் வெகுதொலைவிலில்லை.

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், மருத்துவர் தாயன்பன், பாவாணன் எனத் தமிழினப்பற்றாளர்களை மாதக்கணக்கில் சிறைகளிலடைத்து வைத்திருப்பதன் மூலம் - தமிழகத்தின் தமிழின உணர்வை கட்டுப்படுத்தி விடலாமென அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்.

அதிலும் - இருதய சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டு மிகப் பலவீனமான உடல் நிலையைக் கொண்டிருக்கும் பழ.நெடுமாறனைத் தொடர்ச்சியாக சிறையிலடைத்தும், அவரை - ஒவ்வொரு இடமாக விசாரணைகளுக்கு அழைத்தும் - 'சித்திரவதை' செய்யும் போக்கில் தமிழக அரசாங்கம் நடந்துகொள்வதை - மனிதநேயமுள்ள எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஈழத்தமிழர்களின் பேரில் - இவ்வாறானதொரு தீவிர நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜெயலலிதா, அண்மையில் மேற்கொண்டுள்ள இன்னுமொரு அரசியல் நகர்வு, அவரது ஈழத்தமிழின எதிர்ப்பு எல்லைமீறிச் செல்லும் என்ற அபாயத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதும், சமாதான முயற்சிகள் மீதும் கடும்போக்குடனிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் போது - ஜெயலலிதாவைச் சந்திப்பதற்கு அவரளித்த முக்கியத்துவமும், ஆர்வமும் - இந்த அபாயம் பற்றிய சந்தேகத்தை வலிதாக்குகின்றது.

அதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன், இந்தியப் பிரதமர் வாஜ்பாய் புதுடெல்கியில் பேச்சுக்களை ஆரம்பிக்கமுன்னர் - தொலைபேசியூடாக, ஜெயலலிதாவுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் தகவலும்- இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில், இந்திய மத்திய அரசின் அணுகுமுறைகளில் - ஜெயலலிதாவும் முக்கிய செல்வாக்கு வகிப்பதை எடுத்துச் சொல்கின்றது.

எனவே - ஜெயலலிதாவின் தீவிர தமிழ் எதிர்ப்புணர்வும், விடுதலைப் புலிகள் மீதான வன்மமும் - இலங்கை இனப்பிரச்சினை பற்றிய இந்தியாவின் கொள்கை வகுப்பில் முக்கிய பாதிப்பைச் செலுத்தலாம் என்பதை - ஈழத்தமிழர்கள் அவதானத்துடன் கருத்திற்கொள்ளவேண்டியுள்ளது.

# நாம் எந்தவொரு இனத்தையும் அடக்குபவர்களாக இருக்கோம்

## திருமலை மகளிர் அரசியற் பொறுப்பாளர் காருண்யா

(திருமலை)

நாம் எந்த இனத்தாலும் அடக்கப்படுபவர்களாகவோ, எந்த இனத்தையும் அடக்குபவர்களாகவோ இருக்கமாட்டோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியற்பொறுப்பாளர் காருண்யா தெரிவித்தார்.

அன்னை பூபதியின் 15 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட அரசியல் பணிமனையில் நடைபெற்றது.

மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் காருண்யா அங்கு உரையாற்றுகையில்,

விடுதலைப்போராட்டத்தில் பக்கபலமாக இருந்தவர்கள் மக்களே. அவர்கள் அடைந்துகொண்ட துயரமே எமது போராட்டம் இன்று வெற்றியடைவதற்குக் கால்கோளாக அமைந்தன.

மறைந்த எமது மாவீரர்களின் எண்ணங்கள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறிக்கொண்டு வருகின்றது. நாம் எந்த இனத்தையும் அடக்குகின்றவர்களாக இருக்கமாட்டோம். அது போன்று எந்த இனத்தாலும் அடக்கப்படுபவர்களாவும் இருக்கமாட்டோம்.

தீயசக்திகளின் நடவடிக்கைகள் காரணமாக மூதூர் பகுதியில் அசம்பாவிதங்கள் தோன்றியுள்ளன. இன்னுமொரு இனத்தை அடக்குபவர்களாக நாம் செயற்படமாட்டோம். சமாதானத்தை விரும்புவதன் காரணமாக நாம் இன்று பல உயிர்களை இழந்து வருகின்றோம். வன்முறைகளைத் தூண்டுபவர்கள் நாங்கள் இல்லை. வன்முறைகளைத் தூண்டுபவர்களுக்கு எதிராகச் செயற்பட்டு அவர்களின் நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும். முஸ்லிம் சகோதரர்கள் ஏமாந்துவிடக் கூடாது. அவர்களின் பாதுகாப்புக்கு எமது தலைவர் முற்போக்குச் சிந்தனையைக் கொண்டிருக்கின்றார் என்றார்.

திருமலை மாவீரர் காப்பகத்தின் பொறுப்பாளர் தென்னவன் அங்கு உரையாற்றுகையில் -

விடுதலைப் போராட்டம் தனித்து இளைஞர்கள், யுவதிகளுக்கு மட்டுமான போராட்டம் அல்ல. எல்லோரும் இணைந்து இதில் பங்குகொள்ள வேண்டும். நாட்டுப்பற்றாளர்களின் தியாகங்கள் நினைவுகூரப்படவேண்டும். திருகோணமலை மண்மீது எல்லோரும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டவர்கள்கூட இந்த மண்ணுக்கு ஆசைப்படுகின்றனர். எமது வரலாறுகள் மாற்றப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் நாங்களே. எமது மண் மீது பற்றுக்கொண்டவர்களாக நாங்கள் இருக்கவேண்டும். அழிக்கப்பட்ட எமது பிரதேசங்களில் நாங்கள் குடியேறி அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

(04)

## தமிழ்ப் பெண்ணை மணம் முடிக்க தந்தை எதிர்ப்பு; மகன் தற்கொலை!

(கொழும்பு)

தமிழ் யுவதியை மணம் முடிப்பதற்குத் தந்தையார் எதிர்ப்புத் தெரிவித்ததால், சிங்கள இளைஞர் ஒருவர் விஷமருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் நீர்கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

மரணவிசாரணையில் இளைஞரின் தாயாரான மேரி திரேசா சாட்சியமளிக்கையில்,

இறந்த எனது மகனுக்குத் திருமணப்பேச்சுக்கள் நடைபெற்றுவந்தன. இருந்தபோதிலும், அவர் தமிழ் யுவதியைத் திருமணம் செய்யவிருப்பதாகக் கூறினார். இதற்கு இவருடைய தந்தையார் எதிர்ப்புத் தெரிவித்தார். இரவு 11.30 மணியளவில் வீட்டுக்கு வந்து எனது மகன் விஷமருந்தியதாகத் தெரிவித்தார். அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். பின் அங்கு அவர் மரணமானார் எனத் தெரிவித்தார்.

### வடக்கு-கிழக்கு பகுதிகளில்

## நோய்த்தடுப்பு நடவழிக்கைகளை தீவிரப்படுத்த அரசாங்கம் முழவு!

### சுகாதார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தவிருப்பதாகச் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

இருபது வருடங்களுக்கு மேலாக நீடித்த போரினால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், மக்களின் சுகாதார நிலைமை மோசமடைந்திருக்கின்றது.

யுத்த நிறுத்தத்தின் பின்னர் சுகாதாரநிலையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முழுக்கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இதற்கென வெளிநாட்டு நன்கொடை, நிறுவனங்களின் உதவியும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியும் பெறப்படவுள்ளது.

ஏனைய அமைச்சுக்களின் உதவியையும் பெறுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன மேலும் தெரிவித்தார்.

## பிரதேச செயலக மட்ட உதைபந்தாட்ட போட்டி

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில், அடுத்த கட்ட நிகழ்வாக 24 ஆம் திகதிமுதல் 30 திகதிவரை உதைபந்தாட்டப் போட்டிகள் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

14 அணிகள் பங்குபற்றும் இப்போட்டித் தொடரில் அரை இறுதி மற்றும் இறுதிப்போட்டிகளுக்கு 90 நிமிடங்களும், ஏனைய போட்டிகளுக்கு 60 நிமிடமும் வழங்கப்படவுள்ளது.

அதேபோன்று, விளையாட்டு அட்டவணையில் குறிக்கப்பட்ட திகதியில் போட்டிகள் நடைபெறும் என்றும் விளையாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சு)

## கோவிலில் திருடியவர் பொலிஸாரிடம் அகப்பட்டார்!

கொக்குவில், நந்தாவில் கற்பகத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்திலிருந்து திருட்டுப்போன நீரிறைக்கும் இயந்திரம், கைப்பம்பி என்பன கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேற்படி ஆலயத்திலிருந்து நீரிறைக்கும் மோட்டார், நீர்க் கைப்பம்பி என்பவற்றைத் திருடிச்சென்றவர், கோண்டாவில் பகுதியில் துவிச்சக்கர வண்டி ஒன்றினையும் திருடியுள்ளார். சைக்கிள் திருட்டுச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட திருடனைக் கோப்பாய் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியபோது மோட்டார் திருட்டும் அம்பலமானது.

இதனை அடுத்து சம்பந்தப்பட்ட நபர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, யாழ்.சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (சு)

## மாகாண அளவில் சித்திரக் கண்காட்சி!

வடக்கு - கிழக்கு மாகாண் கல்வி, கலாசார, விளையாட்டு, சுகாதார அமைச்சு மே மாதத்தில் சித்திரக் கண்காட்சி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

இந்தச் சித்திரக் கண்காட்சிக்கு மாணவர்கள், ஓவியர்கள் தங்கள் சித்திரங்களைச் சமர்ப்பிக்கமுடியும்.

தாங்கள் விரும்பும் அளவில் நவீன அல்லது பழமைவாத சித்திரங்களை அனுப்பிவைக்கலாம்.

மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பாகச் சித்திரங்களை கலாசார திணைக்களம், மாகாண கல்வி அமைச்சு, திருகோணமலை என்ற விலாசத்துக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பூகோள மயமாக்கலின் விளைவுகளை தெளிவாக எடுத்துக்கூறும் நூல்!

### வெளியீட்டு விழாவில் பொருளியற்துறைத் தலைவர்

வரலாற்றுப் பயணத்தில் எம்மண்ணில் ஓர் திருப்பு முனையாக "பூகோளமயமாதல்" எனும் நூல் மலர்ந்திருக்கிறது. அருட்திரு. கிருபானந்தன் அடிகளாரின் தூரநோக்குடைய இந்த நூலில்- பூகோள மயமாதலினால் ஏற்படும் விளைவுகளை மக்களுக்கு விழிப்பூட்டும் வகையிலும், மிகத் துல்லியமாகப் பல ஆதாரங்களுடனும் இலகுவில் புரிந்துகொள்ளும் வழிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கியூடெக் நிறுவனத்தால் வெளியீடு செய்யப்பட்ட "பூகோளமயமாதல்" எனும் நூலுக்கான ஆய்வுரையை மேற்கொண்ட யாழ்.பல்கலைக்கழகப் பொருளியற்துறைத் தல்லவர் வி.பி.சிவநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்- சமூகத்திற்கு ஏற்படவிருக்கும் எதிர்விளைவுகளை முன்கூட்டியே குரல் எழுப்புவதில் மிஷனறிமார் தூரநோக்குடன் செயற்பட்டனர். யுத்தத்தின் பின்னர் பிறேசிலில் பூகோள மயமாதலின் விளைவுகளை அவர்கள் தூர தரிசனத்துடன் நோக்கி எச்சரிக்கை செய்தனர்.

இது போன்றே இன்று "பூகோளமயமாதல்" எமது மண்ணில் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை கற்றறிந்தவற்றை மக்களுக்கு விழிப்பூட்டுவதில் தன் பணியைக் காலமறிந்து வெளிப்படுத்தியது ஏனைய படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும், சமூகத்துக்கும் முன்னுதாரணமாக்கியது பாராட்டத்தக்கது - என்றார்.

நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய அருட்திரு.ஜெயக்குமார் அடிகளார் தனது தலைமை உரையின் போது,

எத்தனையோ வறியநாட்டு உழைப்பாளிகளின் உழைப்பும், நேரமும் சுரண்டப்படுகின்றது. ஆனால், இது வெளிப்பார்வைக்குத் தெரிவதில்லை, தெரியப்படுத்தப்படுவதுமில்லை. ஆனால், இவை பற்றிய தெளிவும், விழிப்பும் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது காலத்தின் தேவையும், கட்டாயமுமாக இருப்பதால் இந்நூலை வெளியிட்டு வைக்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

## விக்னேஸ்வரா கல்லூரியில் கணினிப் பயிற்சி வகுப்புகள்

(வடமராட்சி)

கரவெட்டி விக்கேஸ்வராக் கல்லூரியில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் பயிற்சி நெறியினை முறைசாராக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி கடந்த வாரம் ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலையைவிட்டு விலகிய இளைஞர் - யுவதிகளுக்குத் தொழிற்திறன் வழிகாட்டும் நோக்கில் இந்தப் பயிற்சிநெறிகள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (23)

# சமாதானத்தை வர்த்தக மயப்படுத்துவதா? அல்லது மக்கள் மயப்படுத்த வேண்டுமா?

இம்முறை சமாதானம் கண்டி வீதியை ஒரு ஷோகேஸ் ஆக மாற்றி விட்டுள்ளது.

கடந்த 15 மாதகால யுத்த நிறுத்தம் கண்டி வீதியின் இரு மருங்கிலும் விளம்பரப்பலகை




களை நட்டுச்செல்கிறது.

மாங்குளம் சந்தி இப்பொழுது ஒரு குமாரிகா சந்தி. அங்கே குமாரிகா சம்போவுக்கு ஒரு பெரிய விளம்பரப்பலகையுண்டு.

முறிகண்டி ஒரு நெக்ரோ சந்தி. அங்கே நெக்ரோ சோடாக் கொம்பனியின் விளம்பரப் பலகைகளை அநேகமாக எல்லாக் கடைக் காரர்களும் வாங்கிப் பொருத்தியிருக்கிறார்கள். பெரிய நெக்ரோ விளம்பரப் பலகையின் மிகச்சிறிய வெற்றிடத்தில் கடையின் பெயர் சிறிதாக எழுதப்பட்டிருக்கும்.

நல்லவேளை, முறிகண்டிப்பிள்ளையார் மட்டும் எப்படியோ தப்பிவிட்டார். அவருடைய கோயில் முகப்பில் அப்படியொரு நெக்ரோ விளம்பரம் எதுவும் மாட்டப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் செம்மணி வெளி - ஒரு சக்தி எவ்.எம் வெளி இப்பொழுது.

அங்கே பிரமாண்டமான ஒரு சக்தி எவ்.எம் விளம்பரம் உண்டு.

யாழ்ப்பாணம் வரவேற்கிறது என்ற வரவேற்பு வளைவை விடவும் சக்தி எவ்.எம் விளம்பரம் மிக்க கவர்ச்சியாக நிறுத்தப்பட்டுள்ளது.

முதற்தடவையாக அந்த வளைவுக்கு வரும் எவருக்கும், யாழ்ப்பாணம் வரவேற்கிறதா, சக்தி எவ்.எம் வரவேற்கிறதா என்று குழப்பம் உண்டாகும்.

வல்லைவெளி ஒரு டன்ரெக்ஸ் வெளி அல்லது மிற்சுயி வெளி. டன்ரெக்ஸ் சம்போவுக்கும், மிற்சுயி சிமெந்துக்கும் பெரிய விளம்பரங்கள் அங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பொழுது யாழ்ப்பாணத்தின் உள்வீதிகள், உட்கிராமங்கள் பெரும்பாலானவற்றில் இத்தகைய கவர்ச்சியான விளம்பரப்பலகைகள் ஒன்றில் பிரதான வளைவுகள், திருப்பங்களில் அல்லது நுழைவாசல் போன்ற இடங்களில் நிறுத்தப்படுகின்றன. அல்லது உள்ளூர் வர்த்தக நிலையங்களுக்கு இலவசப் பெயர்ப் பலகையாகக் கொடுக்கப்படுகின்றன.




இதில் அதிகமானவை கொழும்பிலுள்ள பெரிய வர்த்தக நிறுவனங்களுக்குரியவை. உள்ளூர் தமிழ வர்த்தக நிறுவனங்களின் விளம்பரப் பலகைகள் மிக மிகக் குறைவு.

அதாவது - யாழ்ப்பாணத்திலும், வன்னியிலுமுள்ள பெரிய பெரிய சந்திகள், திருப்பங்கள், வெளிகள் போன்றவற்றைக் கொழும்பிலுள்ள பெரிய வர்த்தக நிறுவனங்கள் விலைக்கு வாங்கிவிட்டனவோ என்று மயங்குமளவுக்கு நிலைமையுள்ளது.

கடந்த வருட இறுதியில் மானுடத்தின் ஒன்று கூடல் - யாழ்ப்பாணத்தில் நடந்த போது, இது பிரஸ்தாபிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் இது பற்றிக் கூறினார். செம்மணியில் நாங்கள் கிரிஷாந்திக்கும், அவரைப் போன்று புதைக்கப்பட்ட, காணாமற் போன எல்லோருக்காகவும் ஒரு நினைவுச்சின்னத்தை நிறுவியிருந்திருக்க வேண்டும். ஆனால், இப்பொழுது அங்கே உறுதிகொண்டு நிற்பது சக்தி எவ்.எம் விளம்பரம் என்ற தொனிபட அவர் அங்கே பேசினார்.

குறிப்பாக, வன்னியில் இது விடயத்தில் மிகவும் சுவாரஸ்யமான ஒரு முரண்பாடுண்டு. என்னவெனில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வர்த்தக நிறுவனங்கள் தூய தமிழ்ப் பெயர்களைத்தான் வைக்கலாம். ஆனால், மேற்சொன்ன விளம்பரங்கள் அதிகமானவை அவ்வாறில்லை. அவை பெரும்பாலும் தூய தமிழ்ப்பெயர்களை உடையவை அல்ல.

கடந்த மார்ச் மாதக் கடைசியில் வொஷிங்ரனில் ஒரு வட்டமேசை மாநாடு நடந்தது. அமெரிக்காவிலுள்ள முதலீட்டாளர்களுக்கும், இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையிலான ஒரு சந்திப்பு அது.

சிறீலங்கா - "தென்னாசியாவுக்கு நுழைவாசல்" என்று அந்த சந்திப்புக்குப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது தொடக்கவுரையில் ஓரிடத்தில் சமாதானத்தை வர்த்தக மயப்படுத்துவதற்கான உடனடித்தேவைகள் **"Commercialize Peace"** பற்றி அழுத்திக் கூறியுள்ளார்.

இங்கேதான் ஒரு சந்தேகம் எழுகிறது. கடந்த 15 மாதகால யுத்த நிறுத்தத்தின்போதும், சமாதானத்தை வர்த்தக மயப்படுத்தும் நோக்கிலான நகர்வுகளே அதிகம் இடம்பெற்று வருகின்றன. மாறாக, மிகவும் அவசிமாகவுள்ள சமாதானத்தை - அரசியல் மயப்படுத்தும் வேலைகளோ அல்லது சமாதானத்தை மக்கள் மயப்படுத்தும் வேலைகளையோ அநேகமாகச் செய்யப்படவில்லை என்பதே யதார்த்தமாயுள்ளது.

சமாதானத்தின் பேரால் முழு இலங்கைத்தீவையும் ஒரே வர்த்தக அலகாக்கிவிடுவதும், சமாதானத்தைக் காட்டி உதவிவழங்கும் நாடுகளிடம் அதிகளவு நிதியைப் பெறுவதும், சமாதானத்தைக் காட்டி முதலீட்டாளர்களைக் கவர்வதும், மொத்தத்தில் முழு இலங்கைத்தீவையும் தென்னிந்தியச் சந்தைகளுக்குத் திறந்து விடுவதுமே அரசாங்கத்தின் பொருளாதார மீட்சிக்கான உடனடித்திட்டம்போலத் தோன்றுகிறது. இங்கு சமாதானம் ஒரு இறுதி இலக்காய் அல்ல, மாறாகப் பொருளாதார மீட்சிக்கான ஒரு மூலோபாயமாகவே பார்க்கப்படுகிறது. இதிலுள்ள பயங்கரம் என்னவென்றால் - இலங்கைத் தீவை - தென்னாசியாவுக்கு நுழைவாசல் என்று அழைத்துவிட்டு, அந்த நுழைவாசலை தென்னிந்தியச் சந்தைக்குத் திறந்துவிடுவதன் மூலம் அடையப்படும் இறுதி இலக்கு எது என்பதே.

அதாவது, பேரரசுகளின் பிராந்தியக்களுக்கான பெருவியூகங்களுக்கு இலங்கைத் தீவின் சமாதானம் சிக்கிவிட்டது.

என்றபடியால்தான், அது வர்த்தக மயப்பட்ட அளவுக்கு மக்கள் மயப்படத் தவறிவிட்டது. கடந்த 15 மாதகால யுத்தநிறுத்தத்திலும், சமாதானம் மக்கள் மயப்பட்ட அளவு போதாது என்பதால்தான் சமஷ்டி பற்றிய கருத்துக் கணிப்புக்களின் போது, சிங்களவர் 70% இற்கும் அதிகமாக எதிர்த்துக் கருத்துக் கூறும் ஒருநிலை தொடர்ந்தும் காணப்படுகிறது.

கடந்த 15 மாதகால புரிந்துணர்வு உடன்படிக்கையின்போது தமிழ் - சிங்கள - முஸ்லிம் மக்களுக்கிடையில் மெய்யான புரிந்துணர்வு ஏதும் உருவாகவில்லை என்பதும் இதைத்தான் காட்டுகின்றது.

அதாவது, சமாதானம் இன்னமும் மக்கள் மயப்படவில்லை என்பதே ஆகும்.

இதில் ஒரு பெரிய பிரச்சினையுண்டு. அது என்னவெனில், யுத்தத்தை மக்கள் மயப்படுத்திய அதே அரசியல்வாதிகள் - எப்படி சமாதானத்தை மக்கள் மயப்படுத்தலாம் என்பதாகும்.

யுத்தகாலங்களில் யுத்தத்தை மக்கள் மயப்படுத்துவதற்காகவுள்ள




எல்லாச் சமூக நிறுவனங்களையும், அரசவளங்களையும் பாவித்து வந்த அரசியல்வாதிகள்,

இனித்தமது மூலோபாயத்தை மாற்றுவது என்பது கிட்டத்தட்ட ஒரு சமூகப்புரட்சி போன்றது.

இதற்கென்ற கட்சி அரசியலுக்கப்பால் ஒரு பொதுவேலைத் திட்டம் போடப்பட வேண்டும்.

இதில் மீடியாக்களையும் இயன்றளவு உள்வாங்க வேண்டும்.

எந்த வாய்கள் யுத்தத்துக்காகப் பொய்களைக் கூறினவோ, அதே வாய்கள் சமாதானத்துக்காக உண்மைகளைக் கூறவேண்டியிருக்கும்.

**நிலாந்தன்**

இப்படியேதும் நடந்தால் அது இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அரசியல் அதிசயங்கங்களில் ஒன்றாயிருக்கும்.

இதற்கெல்லாம் முதலில் சமாதனத்தைத் தியாகம் செய்யவல்ல ஒரு சிங்களத் தலைவர் வேண்டும்.

இல்லையென்றால் யுத்தத்தின் வெற்றிகளுக்காகத் தியாகம் செய்யத்தயாரான படையணிகளே நாட்டில் பெருகும். இது எங்கே கொண்டு போய்விடும்?

சமாதானத்தை வர்த்தக மயப்படுத்துவது என்று கூறிக்கொண்டு, அதை யுத்த வியாபாரிகளிடம் கையளிப்பதில்தான் முடியும்.

*

## க. பொ. த உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் முதலாவது கட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. 1781 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு, 2 இலட்சத்து 12 ஆயிரம் பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 39 ஆயிரத்து 500 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

இவ்வருடம் முதன்முறையாக ஆயிரம் மாணவர்கள் ஆங்கிலம் - தமிழ், சிங்களம் - ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தோற்றவுள்ளனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு மே மாதம் 14 ஆம், 15ஆம், 16 ஆம் திகதிகளில் பரீட்சை இடம்பெறாதென்றும், 17 ஆம் திகதி முதல் இரண்டாம் கட்டப் பரீட்சைகள் இடம்பெறும் என்றும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸாரைத் தாக்கியவர் 'ஆமி மல்லி' என அறிவிப்பு!

(கொழும்பு)

உறுகொடவத்தையில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியவர் இராணுவத்தைவிட்டுத் தப்பியோடிய 'ஆமி மல்லி' எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய 'ஆமி மல்லி' பாதாள உலகக்குழுவொன்றின் தலைவராக இருக்கிறார்.' இவர் பொலிஸார் மீது தாக்குதலை நடத்தி, ஒரு பொலிஸ் அதிகாரியைக் காயப்படுத்தினார். அத்துடன், பொலிஸாரின் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் அவரால் எரியூட்டப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக, 'ஆமி மல்லி' மற்றும் 13 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். 'ஆமி மல்லி' கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைதாகித் தடுப்புக் காவலிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னரே விடுதலையாகியிருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி வைத்தியசாலைகளில் கடந்த வருடம் 7 கர்ப்பிணிகள் மரணம்!

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் கடந்த வருடம் ஏழு கர்ப்பிணித் தாய்மார் பிரசவத்தின்போது மரணமானதாகத் தெரியவருகின்றது.

அக்கராயன் மருத்துவமனையில் மூன்று கர்ப்பிணித்தாய்மாரும், பூநகரி மருத்துவமனையில் நான்கு கர்ப்பிணித்தாய்மாரும் இவ்வாறு மரணமாகியுள்ளனர்.

இந்த மரணங்கள் பற்றிக் கருத்து வெளியிட்ட மருத்துவ அதிகாரிகள், மேற்படி பகுதிகளில் அடிப்படைச் சுகாதார வசதிகளில்லாமையாலேயே இந்த மரணங்கள் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டனர்.

வன்னிப் பிரதேசத்தின் மீது அமுல்செய்யப்பட்டிருந்த பொருளாதார, மருந்துத் தடைகள் நீக்கப்பட்ட போதும், இந்தப் பகுதியின் சுகாதார நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையெனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை - கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு பிரசவ விடுதி, வைத்தியர் விடுதிகள் அமைக்கப்படவுள்ளதுடன் குடிநீர், மின்பிறப்பாக்கி வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி வைத்தியசாலைப் புனரமைப்புப் பணிகள் தொடர்பான உடன்படிக்கை கிளிநொச்சி கச்சேரியில் செய்து கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகம், மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி ஆகியோரும் மருத்துவமனைப் புனரமைப்புக்கு உதவிசெய்யும் ஜப்பானிய அபிவிருத்தி ஸ்தாபன பிரதிநிதி உச்சிஹத்தாவும் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

## ஓமந்தைப் பகுதியில் ராணுவ சிப்பாய் மரணம்!


### பொலிஸ் விசாரணை ஆரம்பம்


வவுனியா மாவட்டத்தில் ஓமந்தைக்கு அண்மையிலுள்ள பேயாடி கூழாங்குளம் என்னும் இடத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.


லான்ஸ் கோப்ரல் எச்.ஏ.ரன்பண்டா என்ற சிப்பாயே உயிரிழந்தார். இவரது மரணம் தொடர்பாகப் பொலிஸ் விசாரணைகள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்ட இராணுவ வட்டாரங்கள், மேற்படி சிப்பாய் எவ்வாறு மரணமானார் என்பது பற்றித் தகவல் வெளியிடவில்லை.


மேற்படி சம்பவம் கடந்த 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

## புனித வாரக் காட்சிகள்


குவாத்தமாலா நாட்டில் - அன்றிகுவா நகரில் சிலுவைப் பாதைக் காட்சிகள்.


பனாமாவில் சிலுவைப் பாதைக் காட்சிகள்.


ஹொங்கொங்கில் ரோமன் கத்தோலிக்க ஆலயத்தில் 'சார்ஸ்' அச்சுறுத்தலால் - வாயைக் கட்டியபடி பீடப் பரிசாரகர்கள்.


வத்திக்கானில் - ஈஸ்ரர் தின ஆராதனையில் ஒளியேற்றும் பாப்பரசரும், பக்தர்களால் ஒளியேற்றப்பட்ட மெழுகுதிரிகளும்.

# பலஸ்தீன அகதிமுகாமின் மீது இரவில் இஸ்ரேல் தாக்குதல்!

## ஆறு பேர் பலி, 40 பேர்வரையில் படுகாயம்

கடந்த சில மாதங்களின் மிகப் பெரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு - இஸ்ரேலியத் துருப்புக்கள் காஸா நகரிலுள்ள பலஸ்தீன அகதிமுகாமொன்றுக்குள் புகுந்திருக்கின்றன.

யுத்த டாங்கிகள், ஹெலிகொப்ரர்கள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் - ஐந்து பலஸ்தீனர்களும், இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர். 40 பலஸ்தீனர்கள் படுகாயமடைந்தனர்.

காஸா நகரின் ர.்.லா அகதிகள் முகாமை நோக்கி, இஸ்ரேலின் 50 யுத்த டாங்கிகளும் கவச வாகனங்களும் இரவோடு இரவாக முன்னேறி சுற்றிவளைத்தன.

மூன்று வழிகளில் நடந்த இந்த முற்றுகை - பலஸ்தீனப் போராளிகளின் மறைவிடம் ஒன்றை இலக்கு வைத்தே நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.


இஸ்ரேல் - எகிப்து எல்லையில் இருக்கும் இந்த அகதிகள் முகாமில் 60,000 பலஸ்தீனர்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - பலஸ்தீனப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட மூன்று காஸாம் ரக ஏவுகணைகள் - இஸ்ரேலிய நகரான செடேரற்றில் வீழ்ந்ததில் ஒரு பெண் காயமடைந்ததாக அந்நகர மேயர் தெரிவித்தார்.



## ஈராக்கில் அமைதி உண்டாகுக; பாப்பரசர் ஈஸ்ரர் தின உரை!

(வத்திக்கான்)



ஈஸ்ரர் தினத்தையொட்டிய ஆராதனையில் கலந்துகொண்ட பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், ஈராக்கில் அமைதி உண்டாக வேண்டும், சுதந்திரம் உறுதிபெற வேண்டும் என தனது ஆராதனை உரையில் குறிப்பிட்டார்.

ரோமில் - சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் கூடியிருந்த பல்லாயிரம் மகள் மத்தியில் - 82 வயதான பாப்பரசர் தனது உரையை நிகழ்த்தினார்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், ஈராக் மக்கள் தமது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் அவர் அங்கு அழைப்பு விடுத்தார்.

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்காவும் - பிரிட்டனும் ஆரம்பிப்பதற்கு முன்னரேயே - போரைத் தடுப்பதற்கு பாப்பரசர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஈராக்கிலுள்ள கிறிஸ்தவர்களும் நேற்று ஈஸ்ரர் தினத்தைக் கொண்டாடியதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## கர்பாலாவுக்கு ஷியா முஸ்லிம்கள் படையெடுப்பு

ஈராக்கின் கர்பாலா நகரிலுள்ள - ஷியா முஸ்லிம் மக்களின் புனிதத் தலத்திற்குச் செல்வதற்கு, சதாம் ஹுசைன் ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து - ஆயிரக்கணக்கான ஷியா இன முஸ்லிம்கள் அங்கு செல்ல ஆரம்பித்துள்ளனர்.

பெண்கள், சிறுவர்கள் உட்படப் பெருந்தொகையானோர், கால் நடையாகவே கர்பாலா நகருக்கு வர ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்



படுகின்றது.

சதாம் ஹுசைனின் ஆட்சியில், ஷியா இன முஸ்லிம் மக்கள் பல்வேறு நெருக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

நபிகள் நாயகத்தின் பேரனான ஹுசைன் - கர்பாலாவில் நடந்த யுத்தமொன்றில் கொல்லப்பட்ட நிகழ்வை, ஷியா முஸ்லிம்கள் மிக முக்கியமான நினைவு தினமாக அனுஷ்டித்து வருவதையொட்டியே கர்பாலாவுக்கான இப்பயணங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## மசூதிகளில் உருவாகும் அமெரிக்க எதிர்ப்புப் புயல்

(பக்தாத்)

ஈராக்கை அமெரிக்கா கைப்பற்றிய பின்னர், அங்குள்ள மசூதிகள் புதியதொரு கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டவை போல செயற்படுகின்றன.

ஷியா, சுனி முஸ்லிம் மக்களிடையே இதுவரையில் பிளவுகள் இருந்தாலும் - இப்போது 'அமெரிக்க எதிர்ப்பு' என்ற பதாகையின் கீழ் அனைவரும் ஒன்றுபடுகின்றனர்.

'ஷியா, சுனி என்ற வேறுபாடில்லை, நாம் இஸ்லாமியர்களாக ஒன்றுபடுவோம்' என மசூதிகளில் வாசகங்கள் காணப்படுகின்றன. அரபு மொழியில் மட்டுமல்ல - ஆங்கிலத்திலும், அமெரிக்க எதிர்ப்பு வாசகங்கள் மசூதிகளில் தொங்க விடப்பட்டிருக்கின்றன.

மசூதிகள் பலவற்றை அமெரிக்கத் துருப்புக்கள் தாக்கியதையும், சேதப்படுத்தியதையும் அங்குள்ளவர்கள் மன்னிக்கத் தயாராக இல்லை. 'தோளில் வைத்திருந்த ரொக்கட்டுக்களால் அவர்கள் சுட்டார்கள். எமது மசூதி சிதைவடைந்தது. 'அல்லாஹு அக்பர்' என - ஒலிபெருக்கியில் கோஷமிட்ட முஸ்லிம் மதத் தலைவர் ஒருவரைக் கைது செய்யவும் அவர்கள் முயன்றனர்' என்றார் - சம்பவத்தை நேரில் பார்த்திருந்த ஹிஷாம் என்ற ஈராக்கிய வயோதிபர்.

உலகவலம்

# சீனாவில் 'சார்ஸ்' தீவிரம்; தேசிய விடுமுறைகள் இரத்து

உயிர்கொல்லும் 'சார்ஸ்' நோயின் தீவிரமான தொற்றுகையைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்காக - சீனாவில் சுகாதார அமைச்சரும், தலைநகர் பீக்கிங்கின் மேயரும் - கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பொறுப்புக்களிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இதேவேளை - மே மாதத்தில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வழமையாக அறிவிக்கப்பட்டு வந்த ஒருவாரத் தேசிய விடுமுறையையும் சீன அரசு இரத்துச் செய்துள்ளது.

சீன அரசின் உத்தியோகபூர்வ தகவல்களின்படி இதுவரை - 'சார்ஸ்' நோயின் தாக்கத்தினால் 79 பேர் பலியாகியிருக்கின்றனர். 1807 பேர் நோய்த்தொற்றுக்கு ஆளாகியிருக்கின்றனர். இதுவரை உலகளாவிய ரீதியில் 200 இற்கும் அதிகமானோரை 'சார்ஸ்' பலிகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவைவிட அதிகமாக - ஹொங்கொங்கில் 88 பேர் இதுவரை இறந்துள்ளனர். கனடாவில் 14 பேரும், சிங்கப்பூரில் 14 பேரும், வியட்னாமில் ஐந்து பேரும், தாய்லாந்தில் இருவரும், மலேஷியாவில் ஒருவருமாக பலியானோர் பட்டியல் நீள்கின்றது.

இதேவேளை - நோய் பரவும் நாடுகளில் அதியுயர்



சுகாதாரத்தையும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியிருக்கின்றது. அதேவேள - சீனாவின் உள்ளூர் பிரதேசங்களில் வைத்தியர்கள் பற்றாக்குறையால், அப்பகுதிகளில் சரியான வழிகாட்டலும், சிகிச்சை முறைகளும் பின்பற்றப்படாமலிருப்பதாக, உலக சுகாதார ஸ்தாபனம் கவலை தெரிவிக்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எந்த நிலைமையையும் எதிர்கொள்ள தயாராகுமாறு படையினருக்கு உத்தரவு

(கொழும்பு)

மூன்று மாதங்களுக்குத் தேவையான இராணுவத் தளபாடங்கள் மற்றும் வெடிபொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைக்குமாறும், எந்த நிலைமையையும் எதிர்கொள்ளத்தக்க வகையில் படையினரைத் தயார் நிலையில் வைக்குமாறும் பாதுகாப்பு அமைச்சு, முப்படைகளுக்கும் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

படையினருக்குத் தேவையான வெடிபொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்றவகையில், இதுவரை காலமும் இடைநிறுத்தப்பட்டிருந்த நிதியுதவிகளை வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருக்கிறது.

போதிய வெடிபொருட்கள் இன்மையாலும், நிதியுதவிகள் நிறுத்தப்பட்டதாலும் படையினரின் பயிற்சிகள் பாதிக்கப்பட்டன என்றும், இதனாலேயே படையினரின் பயிற்சிக்கு மட்டுமன்றி மூன்று மாதங்களுக்குத் தேவைப்படும் வெடிபொருட்களைக் கையிருப்பில் வைத்திருக்குமாறும், பாதுகாப்பு அமைச்சு முப்படைத் தளபதிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.




மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

## எமது இலக்கு சமஷ்டி...

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், எங்களுடைய பாதை முழுவதும் போராட்ட வாழ்க்கைதான். அந்தப்பாதையில் வந்தவர்கள் என்கின்றபடியால்தான் சொல்கின்றேன். நாம் மென்மேலும் எமது ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கு, நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அத்தோடு இந்தமாத இறுதியில் மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி- மீளக் குடியமர்கின்ற பிரச்சினை, உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை என்பவற்றுக்கு தீர்வு வழங்கக்கோரி நாங்கள் அனைவரும் போராட்டம் நடாத்த வேண்டிய அவசியமிருக்கின்றது.

அத்தோடு, இம்முறை மேதினத்தில் அனைத்துக் கட்சிகளுடைய பங்களிப்பும் முக்கியமானது. இம் மேதினத்திலே தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பது மட்டுமல்ல - போராட்டச் சூழல்களால் இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்குப் போகமுடியாமல் இருக்கின்ற மக்களின் பிரச்சினை, அந்த நிலங்களை உயர்பாதுகாப்பு வலயம் என்கின்ற போர்வையிலே அடக்கிவைத்துள்ள இராணுவத்தினரின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எமது போராட்டம் இடம் பெற வேண்டும்.

இன்று நாம் ஒன்றுபட்டு நிற்கின்ற நிலைமையைக் கண்டு, தென்னிலங்கைப் பத்திரிகைகள் பொய்யான பிரசாரங்களை மேற்கொள்கின்றன. எமக்குள் குத்துவெட்டு, குரோதம் என்று தப்பான அபிப்பிராயத்தை வளர்க்க முயல்கிறார்கள். இதற்கெல்லாம் சரியான பதிலடி கொடுக்க இந்த மேதினத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

### கண்காணிப்புக்குழு...

ஒரே கடற்படைதான் இருக்கும் எனத்தான் நம்புவதாகவும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி மேலும் தெரிவித்துள்ளார்.

### வைத்திய....

என்றென்றும் பாராட்டுக்குரியது. தமிழ் மக்களின் வரலாறு இவரின் சேவையை நன்றியோடு எப்போதும் நினைவு கூரும்.

இவரின் இந்த தன்னலமற்ற சேவையை பாராட்டிய தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளார்.

### புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய சிப்பாய் கைது

வெலிஓயாப் பகுதியில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய இராணுவச் சிப்பாய் ஒருவர், விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய இந்தச் சிப்பாயை, புலிகளின் காவற்துறையினர் தடுப்புக்காவலில் வைத்திருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

### மண் அள்ளச்சென்றவர் சுட்டுக்கொலை

மன்னார் - சிலாவத்துறையில் அருவி ஆற்றில் மணல் அள்ளச் சென்ற ஒருவர், முஸ்லிம் ஊர்காவற்படையினர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பீற்றர் (வயது 28) என்பவரே நேற்றுமாலை 4.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### அன்புச்சோலை நிறைவு விழா

கனகபுரம், கிளிநொச்சியில் உள்ள அன்புச்சோலை முதாளர் பேணலகத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவுவிழா, நாளை மறுநாள் புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

## கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் புலிகள்-முஸ்லிம்தரப்பு இன்று பேச்சு

### நேற்று சந்திப்பு நடக்கவில்லை

தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக பேச வருமாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறையினரால் விடுக்கப்பட்ட அழைப்பு, முஸ்லிம் மதத்தலைவர்களால் நேற்று நிராகரிக்கப்பட்டது.

கடந்த இருவார காலமாக இடம்பெற்ற சம்பவங்கள் குறித்துப் பேசி, ஒரு இணக்கப்பாட்டை இரு இனங்களுக்கிடையிலும் ஏற்படுத்த எடுத்த இம்முயற்சி தோல்வியடைந்ததாக, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்தார்.

எம்மால், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சம்பூரில் அல்லது மூதூரில் வைத்து இது தொடர்பான பேச்சுவார்த்தையினை நடத்த அழைப்பு விடுத்தோம். எனினும், முஸ்லிம் மதத் தலைவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. இதனால் இம்முயற்சி நிறைவடையவில்லை என அவர் தெரிவித்தார்.

எனினும், நேற்றிரவு கிடைத்த செய்தியின்படி, இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குடன், மூதூர் முஸ்லிம் மதத் தலைவர்கள்- கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட அலுவலகத்தில், கலந்துரையாடலில் ஈடுபட சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தாம் - சம்பூரிலோ, மூதூரிலோ விடுதலைப் புலிகளுடன் பேசமுடியாது என்றும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை அலுவலகத்தில் மாத்திரம் பேசமுடியும் எனறும் தீர்மானித்ததற்கு இணங்க, இன்று அங்கு செல்லவுள்ளதாகவும் முஸ்லிம் மதத் தலைவர்கள் தெரிவித்தனர்.

### அம்பாறையில் ஹர்த்தால்

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில், நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை உட்படப் பல பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மூதூர் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஹர்த்தால் இடம்பெற்றதாக, அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில் கடைகள் மூடப்பட்டிருந்ததோடு, போக்குவரத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

## தனியொரு கடற்படையாக...

★ போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடறபரப்பில் இரண்டு தரப்பு உயர்மட்டங்களும் நடைமுறைச்சாத்தியமுடைய தாக்க வேண்டும். கடற்பரப்பில் இடம்பெறக்கூடிய மோதல்களைத் தவிர்க்க, இரண்டு - கடல் மோதல் தவிர்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒன்றும் திருகோணமலையில் ஒன்றுமாக இவை செயற்படும். இந்தக் குழுக்களில் அரச மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளின் தலைமையில் ஈடுபடுவர்.

★ புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைவாக அரசாங்கம், புலிகளின் கடற்பிரிவை தனியான கடற்பிரிவாக அங்கீகரிக்க வேண்டும்.

★ அதிக குதிரைவலு கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களை மீன்பிடிப் படகுகள் பயன்படுத்துவதற்கு, அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டினை கடற்புலிகளுக்குத் தளர்த்தவேண்டும்.

★ இருதரப்புப் படகுகளும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 1982 ஆம் ஆண்டு வியன்னா சாசனத்துக்கமைவாக தம்மை அடையாளப்படுத்த வேண்டும்.

★ படகுகளில் இரு தரப்பும் பயிற்சியில் ஈடுபடுகின்றபோது, மறு தரப்பைச் சேர்ந்த பிரதிநிதியை பயிற்சியில் ஈடுபடும் தரப்பு தமது படகுகளில் அனுமதிக்க வேண்டும்.

★ இரு தரப்பினரின் கடற்பிரிவுகளும் தவறான புரிந்துணர்வைத் தடுக்கவும், முக்கிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும், கடலில் இருக்கும்போது - சர்வதேச கடற்போக்குவரத்து தொடர்பாடல் அலைவரிசையான சனல் 16 (Channel-16) மூலம் தொடர்புக்கு வரவேண்டும்.

★ இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டையும், இறைமையையும் பாதுகாக்கும் கடமை கடற்படைக்கு முக்கியமானதாகும். இதனடிப்படையில் கடற்படை வழிமறிக்கும்போது, எந்தப் படகுகளும் கீழ்வரும் விதிகளைப் பின்பற்ற ேண்டும்.

1) இடைமறிக்கப்படும் படகு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மேற்பார்வையில் கடற்படையின் அமைதியான, சட்டரீதியான சோதனைக்குட்படுத்தப்படும்.

2) சோதனையிடப்படும் சந்தர்ப்பங்களில், படகுகளில் இருந்து தற்கொலைத் தாக்குதல்கள் நடத்துவதோ அல்லது ஆதாரங்களை அழிப்பதோ போர்நிறுத்த உடன்பாட்டை கடுமையாக மீறுகின்ற செயலாகக் கருதப்படும்.

3) இருதரப்பும் தமது பயணங்களின்போது, இராணுவ சம்பந்தமில்லாத பொருட்களைக் கொண்டு செல்வதை போர்நிறுத்த உடன்பாடு தடைசெய்யவில்லை.

★ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடற்பரப்பில் இரு தரப்புக்களுக்கும் இடையில் ஒரு கடல் மைல் தூர இடைவெளியை பேணிக்கொள்ள வேண்டும். உடனடித்தேவை அல்லது வேறு தேவைகள் ஏற்பட்டால் மட்டுமே தூரத்தைக் குறைக்க வேண்டும்.

★ அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இந்த விதிமுறைகள் குறித்து, தமது கடற்பிரிவினருக்கு விளக்கமளிப்பதோடு, நல்ல கடலோடிக்குரிய தகைமைகளையும் பேணிக் கொள்ள வேண்டும்.

★ கடலில் ஏதாவது சம்பவம் நிகழ்ந்தால், அந்த இடத்தைவிட்டு உடனடியாக விலகிச்செல்ல இரு தரப்பும் முயற்சிக்க வேண்டும்.

★ இரு தரப்பும் தத்தமக்கென வரையறுக்கப்பட்ட கடற்பகுதிகளில் படகு செலுத்துதல், துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி மேற்கொள்ளல் உட்பட கடற்பயிற்சிகளையும் செயல் முறைகளையும் மேற்கொள்ளலாம். இந்தப் பகுதிகளுக்கு அப்பால் புலிகளின் படகுகள் ஆயுதங்களையோ வெடிமருந்துகளையோ கொண்டு செல்ல முடியாது.

★ தமது போக்குவரத்துக்கும் ஆட்களைக் கொண்டு செல்லவும், இராணுவ பயன்பாடற்ற பொருட்களை எடுத்துச் செல்லவும் இரு தரப்புக்கும் இடையில் பாதுகாப்பான, சட்டரீதியான கடல் விநியோகக் கோடுகளை (Legal Maritine Supply Lines) உருவாக்கிக்கொள்ள இருதரப்பும் கலந்துரையாடுதல் வேண்டும்.

★ போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, தனக்கு கிடைக்கக்கூடிய எந்த முறைப்பாடு குறித்தும், உரிய நேரத்தில் அப்பகுதிக்குச் சென்று விசாரிக்கும். கண்காணிப்புக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய இரு தரப்பும் செயற்பட வேண்டும்.

★இந்தத் தருணத்தில் கண்காணிப்புக்குழுவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். கண்காணிப்புக்குழுவினரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், கடும் சட்ட நெறிமுறைகளுக்குட்பட வேண்டியிருக்கும்.

என ஜெனரல் ரெலவ்சனின் சிபார்சில் கூறப்பட்டுள்ளது.

இந்த சிபார்சுகளுக்கான இரு தரப்பினரதும் பதில்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஓமந்தையில் நடைபெறவுள்ள சந்திப்பில் ஆராயப்பட்டு இறுதி முடிவுவெடுக்கப்படும்.

இரு தரப்பிலும் தலா மூன்று உயரதிகாரிகள் இச்சந்திப்பில் கலந்துகொளவார்கள.

இந்தச் சந்திப்புக்கு முன்னர் இரு தரப்புக்களையும் தாம் தனித் தனியே சந்தித்துப் பேசவிரும்புவதாகவும் ஜெனரல் ரெலவ்சன் குறிப்பிட்டுள்ளார்.

### சந்திப்பு பிற்போடப்படலாம்

இதேவேளை - எதிர்வரும் 24 ஆம் திகதி ஓமந்தையில் நடைபெறவுள்ள சந்திப்பு பிற்போடப்படலாம் என கொழும்பிலுள்ள பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## திருமலையில் பதற்றம்...

அல்பிரட் டெரன்ட்ரோய் மூதூர் மெதடிஸ்த தேவாலயத்தில் தங்கியிருந்த மூன்று கர்ப்பிணித்தாய்மார், சித்த சுவாதீனமற்ற நிலையில் உடனடி வைத்திய சேவை வசதி தேவைப்பட்ட இளைஞரொருவர் மற்றும் நீரிழிவு நோய் உச்ச நிலையையடைந்து அவதிக்குள்ளாகி அவசர சிகிச்சை தேவைப்பட்ட முதியவர் ஆகிய ஐந்துபேரை, தமது வாகனத்தில் ஏற்றிச் சென்று கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

அதேவேளை, மூதூரில் நேற்றுக் காலை தமது தேவாலயத்தின் முன்பாக நின்றுகொண்ருந்த மெதடிஸ்த ஆலயப் போதகரை, வீதியில் சென்ற முஸ்லிம் இளைஞர்கள் மிரட்டிச் சென்றதாகவும், இவ்வச்சுறுத்தல் குறித்து உடனடியாக பொலிஸாருக்கும், தேவாலய பாதுகாப்புக்கென கடமையில் இருந்த இராணுவத்துக்கும் முறைப்பாடு செய்ததாகவும் போதகர் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்று நண்பகல் 2.30 மணிக்கு மூதூருக்குச் சென்ற திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள இரா. சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோர், மெதடிஸ்த ஆலய குருமார்களுடன் சேனையூர், சம்பூர் பகுதிகளுக்குச் சென்று, அங்கு தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்தனர்.

மேலும், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருடன், தற்போதைய சம்பவங்கள் மற்றும் அகதிகள் பராமரிப்புத் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.

இதேவேளை - மூதூர் நகரில் நேற்றுப்பகல் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டது. இது நேற்று மாலை 3 மணி முதல் இன்று காலை 6 மணிவரை நடைமுறையிலிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - திருகோணமலை நகரிலும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக நேற்று மாலை 7 மணிமுதல் இன்று காலை 6 மணிவரை பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, நேற்றுமாலை 4.30 மணியளவில், மூதூர் சாபிநகர் கடற்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இறால்குழி பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மீன்பிடித் தொழிலாளி ஒருவர், இனந்தெரியாதவர்களினால் கட்டுத்துப்பாக்கியினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார்.

இவர் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மாணவருக்குப் பாதுகாப்பு

மூதூரில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் பாதுகாப்புக்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இராணுவக் கட்டுப்பாடற்ற மூதூர் கிழக்கிலிருந்து, மூதூர் நகருக்கு இம் மாணவர்கள் இராணுவ பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டு, பரீட்சைக்குத் தோற்றவைக்கப்படுவர்.

மீண்டும் அவர்கள் பாதுகாப்புடன் திரும்பிச்செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், திருமலை மாவட்டத்தின் உயர்தரப் பரீட்சைக்கான இணைப்பாளர் கூறினார்.(04,10)

## ஒப்புநோக்குநர்கள் தேவை

பத்திரிகைத்துறையில் பணியாற்றிய அனுபவம்வாய்ந்த ஒப்புநோக்குநர்கள் தேவை.
22.04.2003 காலை 11 மணிக்கு அலுவலகத்துக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.